


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 238

புதன்கிழமை
23 ஜூலை 2025

ஆடி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

செம்மணி மனிதப்புதைகுழியில்

## சிசுக்களின் என்புத் தொகுதிகளே பெருமளவு நேற்று அடையாளம்!

**யாழ்ப்பாணம், ஜூலை 23**

**அரியாலை செம்மணி மனிதப்புதை குழியின் நேற்றைய அகழ்வின்போது, சிசுக்கள் மற்றும் சிறுவர்களின் என்புத்தொகுதிகள் எனச் சந்தேகிக்கப்படும் எட்டு என்புத்தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.**

15



செம்மணிப் புதைகுழிக்குள்

## பாலூட்டும் போத்தல் அகழ்வில் அடையாளம்?

யாழ்ப்பாணம், ஜூலை 23
அரியாலை செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து, குழந்தைகளுக்குப் பாலூட்டும் போத்தலைப் போன்ற போத்தலொன்று அடையாளம்

15

புதன்பொய்கை

கறுப்பு ஜூலைக் கலவரம்

## 42ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 23
இலங்கையில் இடம்பெற்ற நீண்ட உள்நாட்டுப் போரின் ஆரம்பப் புள்ளியான, கறுப்பு ஜூலைக் கலவரங்களில் கொல்லப்பட்டோரின் 42 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று

13

புலமைப்பரிசில்

## பரீட்சை ஓகஸ்ட் 10

கொழும்பு, ஜூலை 23
2025ஆம் ஆண்டுக்கான தரம் - 5 புலமைப்பரி

15

## தமிழர்களின் கருவையும் விட்டுவைக்காத கொடூரம்

செம்மணிப் புதைகுழி தொடர்பில் கோடீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 23
தமிழர்களின் கருவைக்கூட விட்டுவைக்காமல் அறுத்தெறிந்துள்ளனர் என்பதற்கு செம்மணிப்புதைகுழி சான்றாக அமைந்துள்ளது

15

## வெலிக்கடைப் படுகொலைகள் விசாரிக்கப்படுவது அவசியம்!

செல்வம் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 23
தங்கத்துரை, குட்டிமணி உள்ளிட்டோர் கொடூரமாகக் கொல்லப்பட்ட வெலிக்கடைச் சிறைப்படுகொலை தொடர்பில் விசாரணை நடத்தப்படுவது அவசியம் என்று நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தியுள்ளார்.

15



## அத்துமீறிய மீன்பிடி; 4 மீனவர்கள் கைது

மன்னார், ஜூலை 23
மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில், இந்திய மீனவர்கள் நால்வர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.
மன்னார் கடற்பரப்பில் கண்காணிப்புப் பணியில்

15

## பதில் பொலிஸ்மா அதிபர் தென்னக்கோன் குற்றவாளி

நாடாளுமன்றத்தில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 23
கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள, பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் குற்றவாளி என்பது

15

## புலிகளின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்குச் சதி

கதறுகின்றார் கம்மன்பில

கொழும்பு, ஜூலை 23
இலங்கைப் படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நியாயப்படுத்தும் விதத்திலேயே, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை இராணுவத்துடன் தொடர்புபடுத்தும் சர்வதேசச்சூழ்ச்சி இடம்பெறுகின்றது என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

15

முச்சந்தி முரளி

'வேலியே பயிரை மேய்ஞ்சால் சனங்களும் என்னதான் செய்யமுடியும் சொல்லுங்கோ'

## வட்டுக்கோட்டை பொறுப்பதிகாரி பக்கச்சார்பாகச் செயற்படுகிறார்!

பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் பொதுமக்கள் நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 23
வட்டுக்கோட்டை பொலிஸாரின் அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பக்கச்சார்பாகச் செயற்படுகின்றார் என்று பிரதிப்

15

நிலத்தின் கீழ் பதுக்கப்பட்டிருந்த

## 86 கைக்குண்டுகள் வவுனியாவில் மீட்பு

வவுனியா, ஜூலை 23
வவுனியா நேரியகுளம் பகுதியில், வீடொன்றில் நிலத்தின் கீழ் பரலுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 86 கைக்குண்டுகள், தோட்டாக்கள், பெருமளவு போதை மாத்திரைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.



15



அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்

ashok STEEL
நீடித்த வலிமை

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

பலம் வாய்ந்த கட்டுமானத்திற்கு - அசோக் TMT

மத்திய மாகாணம் - 0773825832
வட. மேல் மாகாணம் - 0773455128
மேல் / தென் மாகாணம் - 0766773659
வடக்கு மாகாணம் - 0773781397
உடனடி அழைப்புகள் - 011 7388940-3

ஒரு மெட்ரிக் டொன் இற்கு ரூ. 232,000 + VAT

SLS
375



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | | ஹந்தஹண ராசி சுப பலன் | | NLB ஜய | |
|---|---|---|---|---|---|
| திகதி | 22.07.2025 | திகதி | 22.07.2025 | திகதி | 22.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4140 | சீட்டிழுப்பு இலக்கம் | 1207 | சீட்டிழுப்பு இலக்கம் | 0166 |
| ஆங்கில எழுத்து | F | வெற்றி இலக்கினம் | ரிஷபம் | ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 12 71 73 77 | வெற்றி இலக்கங்கள் | 17 34 49 56 | வெற்றி இலக்கங்கள் | 4 6 7 4 |
| விசேட எழுத்து | F | | | | |

| மெகா பவர் | | மஹஜன சம்பத | | தன நிதானய | |
|---|---|---|---|---|---|
| திகதி | 22.07.2025 | திகதி | 22.07.2025 | திகதி | 22.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2246 | சீட்டிழுப்பு இலக்கம் | 5898 | சீட்டிழுப்பு இலக்கம் | 1928 |
| ஆங்கில எழுத்து | Q | ஆங்கில எழுத்து | R | ஆங்கில எழுத்து | L |
| சுப்பர் இலக்கம் | 15 | | | | |
| வெற்றி இலக்கங்கள் | 08 12 20 72 | வெற்றி இலக்கங்கள் | 6 3 9 1 2 5 | வெற்றி இலக்கங்கள் | 06 41 46 68 |
| | | | | விசேட எழுத்து | L |

| அத சம்பத | | சுப தவசக் | |
|---|---|---|---|
| திகதி | 22.07.2025 | திகதி | 22.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0473 | சீட்டிழுப்பு இலக்கம் | 0014 |
| ஆங்கில எழுத்து | R | வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 9 1 2 5 | வெற்றி இலக்கங்கள் | 29 33 44 52 |

### திட்டங்கள் கைவிடப்பட்டால்

# அதானி நிறுவனத்துக்கு இலங்கை ரூபா 500 மில். செலுத்த நேரிடலாம்

கொழும்பு, ஜூலை 23

**இந்தியாவின் அதானி நிறுவனம் இலங்கையில் மேற்கொள்ளவிருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பச் செலவுகளுக்காக இலங்கை 300 தொடக்கம் 500 மில்லியன் ரூபாவை மீளச்செலுத்தவேண்டியிருக்கும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

விலை நிர்ணயம் தொடர்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகளை அடுத்து இந்தியாவின் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் இலங்கையில் மேற்கொள்ளவிருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களிலிருந்து விலகியது.

திட்டத்துக்காக இலங்கையில் செலவிடப்பட்ட ஆரம்பச் செலவுகளை மீளச்செலுத்தவேண்டும் என்று அந்த நிறுவனம் கடந்த மே மாதம் கடிதம்மூலம் அரசாங்கத்திடம் கோரியிருந்தது.

திட்டத்தின் ஆரம்பச்செலவினங்களுக்காக இலங்கை அரசாங்கம் 300 தொடக்கம் 500 மில்லியன் ரூபாவை மீளச் செலுத்தவேண்டியிருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் எரிசக்தி அனுமதிப் பத்திரத்துக்காக அதானி நிறுவனம் செலுத்திய தொகை மீளத் திருப்பிச்செலுத்தவேண்டியதில்லை என்பதில் எரிசக்தி அமைச்சு உறுதியாக உள்ளது என்று கூறப்படுகின்றது.

அடுத்த சில மாதங்களுக்குள் சட்டமா அதிபரின் ஆலோசனை மற்றும் அதிகார சபையின் இயக்குநர்கள் குழுவின் ஒப்புதலுக்குப் பின்னர் இந்தத் தொகை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சுத் தகவல்கள் கூறுகின்றன. (எ-இ)



## முட்டை விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை 23

நாடளாவிய ரீதியில் முட்டை விலை நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

சிவப்பு நிற முட்டை 29 ரூபாவாகவும், வெள்ளை நிற முட்டை 27 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி கோருகிறார் சீலரத்ன தேரர்!

கொழும்பு, ஜூலை 23

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தன்னிடம் தரவேண்டும் என்று ஜனசெத பெரமுனக் கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் திறமையானவர்கள் மட்டுமே நியமிக்கப்படவேண்டும். பொதுமக்களின் பிரச்சினைகள், நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் குரல் எழுப்பவேண்டும். ஆனால் நாட்டில் இன்று அவ்வாறான எதிர்க்கட்சித் தலைமை இல்லை. அதனாலேயே எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக்கொள்ளப் பலரும் போட்டியிடும் நிலைமை உருவாகியுள்ளது. நாடாளுமன்றத்தைக் கூட்டி எதிர்க்கட்சித் தலைவர் பதவியை என்னிடம் தாருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் எப்படி இருக்கவேண்டுமென்று செயல் ரீதியாக நான் நிரூபித்துக்காட்டுகின்றேன் - என்றார். (எ-இ)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 22.07.2025 | செவ்வாய்க்கிழமை | 0606 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| B | 4 3 6 6 8 3 |

## Super Ball

| திகதி | தினம் |
|---|---|
| 22.07.2025 | செவ்வாய்க்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2872 | V | 09 15 32 75 |

## சனிதா

| திகதி | தினம் |
|---|---|
| 22.07.2025 | செவ்வாய்க்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| X | 05 18 29 72 | 5033 |

## SASIRI

| திகதி | தினம் |
|---|---|
| 22.07.2025 | செவ்வாய்க்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0731 | 01 04 44 |

## லக்ன ராசி

| திகதி | தினம் |
|---|---|
| 22.07.2025 | செவ்வாய்க்கிழமை |

| மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 04 13 34 35 | 4584 |

## KAPRUKA

| திகதி | தினம் |
|---|---|
| 22.07.2025 | செவ்வாய்க்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| G | 11 | 17 36 38 47 | 2048 |

## அத கோடிபதி

| திகதி | தினம் |
|---|---|
| 22.07.2025 | செவ்வாய்க்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| U | 19 28 52 53 | 2698 |

## முன்னாள் புலி உறுப்பினர் ரி–56 துப்பாக்கியுடன் கைது



கொழும்பு, ஜூலை 23

கொழும்பில் ஒருவர் துப்பாக்கியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ள பொலிஸார், அந்த நபர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் என்றும் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் கிரிபத்கொடவில் உள்ள விடுதி ஒன்றில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும், சந்தேகநபரிடம் இருந்து ரி–56 ரகத் துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சிவப்பு நிறக் கார் ஒன்றில் வந்தவர்கள் துப்பாக்கியைக் கையளித்துவிட்டு, தங்களிடம் இருந்து தகவல் வரும்வரையில் விடுதி அறையில் தங்கியிருக்குமாறு சந்தேகநபரிடம் கூறிச்சென்றனர் என்று கூறப்படுகின்றது.

சந்தேகநபர் குற்றச்செயல் ஒன்றை மேற்கொள்ளும் நோக்கத்தில் துப்பாக்கியைத் தம்வசம் வைத்திருந்திருந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## சமூகச் செயற்பாட்டாளர் ரி.ஐ.டியால் விசாரணை

கிளிநொச்சி, ஜூலை 23

காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவரும், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்டத் தலைவருமான இ.முரளிதரன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

விசாரணையில் உள்ள நபர் ஒருவருடன் தொலைபேசித் தொடர்புகளைப் பேணினார் என்று தெரிவிக்கப்பட்டு அவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். சட்டத்தரணியுடன் முன்னிலையான முரளிதரன் தனது வாக்குமூலத்தை வழங்கியுள்ளார். அவர் அங்கம் வகிக்கும் அமைப்புகள் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-66)

## போக்குவரத்து இடர்பாடுகள் முறையிடுவதற்கு இலக்கம்!

பொதுப் போக்குவரத்தின்போது பொதுமக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் மற்றும் இடர்பாடுகளை முறையிடுவதற்கு வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் முறைப்பாட்டு இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 071 9090900 மற்றும் 021 228 5120 எனும் தொலைபேசி இலக்கங்களே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த இலக்கங்கள் பொறிக்கப்பட்ட விழிப்புணர்வுப் பிரசுரத்தை பேருந்துகளில் ஒட்டும் பணி நேற்று கிளிநொச்சியில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. தொடர்ந்து ஏனைய நான்கு மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. (எ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்சியை நோக்கிச் செல்லும் இலங்கைப் பொருளாதாரம்

ப்ளூம்பேர்க் தளம் தகவல்

**கொழும்பு, ஜூலை 23**
**இலங்கையின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க மீட்சியை நோக்கிச் செல்கின்றது என்று ப்ளூம்பேர்க் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.**

அடுத்த ஆண்டுக்குள் நாட்டின் உற்பத்தி வளர்ச்சி 2018 ஆம் ஆண்டு தொற்று நோய்க்கு முந்திய நிலைகளைவிட அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்படுகின்றது என்றும் அந்தத் தளம் குறிப்பிட்டுள்ளது.
ப்ளூம்பேர்க் தளம் வெளியிட்டுள்ள பொருளாதார அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் இலங்கையின் பொருளாதார மீட்சி தொடரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டில் 5 சதவீத வலுவான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியும், அதைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டு 3.5 சதவீத விரிவாக்கத்தையும், 2026ஆம் ஆண்டு 2.9 சதவீத வளர்ச்சியும் கணிக்கப்பட்டுள்ளது. தற்போதைய கணிப்புகளின்படி நீடித்த அபிவிருத்தி வளர்ச்சி, 2018 ஆம் ஆண்டிருந்த அபிவிருத்தி உச்சத்தையும் தாண்டிச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது இலங்கையின் பொருளாதார நெருக்கடிக் காலத்திற்குப் பின்னர் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையைக் காட்டுகின்றது- என்றுள்ளது. (எ-இ)

## ஆண்கள் எண்ணிக்கை நாட்டில் வீழ்ச்சி

கொழும்பு, ஜூலை 23
1995ஆம் ஆண்டில் நாட்டில் 100 பெண்களுக்கு 100.2 ஆண்கள் இருந்த நிலையில், தற்போது அது 100 பெண்களுக்கு 93.7 ஆண்களாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வடமேற்குப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அமிந்த மெத்சில இந்த விடயத்தைத் தெரிவித்தார்.
பெண்களின் ஆயுட் காலம் அதிகரிப்பு, பெண்களின் பிறப்பு வீதம் உயர்வு, மற்றும் இளம் ஆண்களின் வெளிநாட்டு புலம்பெயர்வு ஆகியவை இந்த மாற்றத்துக்கு பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.
நாட்டில் ஆண்களின் எண்ணிக்கை குறைவது எதிர்காலத்தில் பல நெருக்கடிகளை உருவாக்கக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நாணய நிதியத்திலிருந்து விலகும் கீதா கோபிநாத்

கொழும்பு, ஜூலை 23
சர்வதேச நாணய நிதியத்தின் முதன்மைப் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத் பதவி விலகவுள்ளார் என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா அறிவித்துள்ளார்.
கீதா கோபிநாத் ஓகஸ்ட் மாத இறுதியில் தனது பதவியில் இருந்து விலகி அமெரிக்காவிலுள்ள ஹார்வார்ட் பல்கலைக் கழகத்துக்குச் செல்லவுள்ளார்.
அங்கு அவர் பொருளாதாரத்துறையில் ஆரம்ப கிரிகோரி மற்றும் அனியா காபி பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றவுள்ளார் என்றும் சர்வதேச நாணயநிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## சீதுவையில் துப்பாக்கிச்சூடு; இருவர் கைது



கொழும்பு, ஜூலை 23
சீதுவை ராஜபக்ச மாவத்தையில் நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.
இதில் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற சொய்சா என்பவர் காயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பில் 2 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## ஆண்டுதோறும் காயங்களால் 12,000 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 23
இலங்கையில் காயங்களால் ஆண்டுதோறும் 12ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் எனச் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.
காயங்கள் காரணமாக ஆண்டுதோறும் ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர்.
குறிப்பாக, காயங்கள் ஏற்பட்டதும் உடனடியாக அடிப்படை முதலுதவி அளிப்பது மனித உயிர்களைக் காப்பாற்றுவதிலும் சிக்கல்களைக் குறைப்பதிலும் பிரதான பங்குவகிக்கிறது. இது தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் சுகாதார அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## 5 மாத காலப்பகுதியில் அரச வருவாய் உயர்வு

கொழும்பு, ஜூலை 23
2025 ஜனவரி முதல் மே வரையிலான 5 மாத காலப்பகுதியில் அரசாங்கத்தின் வருமானம் 1,942.36 பில்லியன் ரூபா என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
இது 2024 ஆம் ஆண்டின் முதல் 5 மாதங்களில் அரசாங்கத்தின் 1,619.23 பில்லியன் ரூபா வருமானத்துடன் ஒப்பிடும்போது 19.95% வீத அதிகமாகும். குறித்த காலப்பகுதியில் அரச வரி வருமானம் 1,491.25 பில்லியன் ரூபாவில் இருந்து 1,802.48 பில்லியன் ரூபா வரையில் 20.87% அதிகரித்ததே இதற்கான காரணமென இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (ச-இ)




## ராசி இல்லா ராசா

சிலருக்கு ஒரு கைராசி இருக்கு. அவை தொட்டதெல்லாம் துலங்கும், மண்சவட பொன்னா மாறும். வேற சிலர் அதுக்கு எதிர்மாறு. அவை எதையெல்லாம் தொடுகினமோ துலங்கினதெல்லாம் துலையும். தங்களோட அண்டி நிக்கிறவைக்கு அழிவைக் கொண்டுவாற ராசியும் இருக்கு. அதுக்கு நல்ல உதாரணம் உவர் திஸ்ஸ அத்தநாயக்கதான்.

அத்தநாயக்க யானைக்கட்சியின்ர செயலாளரா, ரணிலின்ர வலது கையா இருந்தவர். அவர் ரணிலோட முன்னாலையும் பின்னாலையும் திரிஞ்ச ராசியோ என்னவோ 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில அரும்பொட்டில ரணில் மஹிந்தவிட்ட மண்ணைக் கவ்விட்டார். அதுக்குப் பிறகு ரணிலுக்கு எங்க திரும்பினாலும் தோல்விதான். கனபேர் உதுக்கு அத்தநாயக்கவின்ர ராசிதான் காரணம் எண்டு சொன்னாலும் ரணில் அதைக் காதில வாங்கேலை. இப்பிடியிருக்கேக்கதான் மஹிந்தவோட முதல்நாள் அப்பம் சாப்பிட்டுட்டு அடுத்தநாளே ரணில் பக்கம் பாய்ஞ்சுபோய் பொதுவேட்பாளரா மைத்திரி மாறினார். அதுக்குப் பதிலடியா ரணிலின்ர வலதுகையா இருந்த திஸ்ஸ அத்தநாயக்கவை தன்ர பக்கம் இழுத்துக்கொண்டு வந்து சுகாதார அமைச்சுப் பதவியும் குடுத்தார் மஹிந்த. ஆனால் அவர் ரணிலுக்கு ஆப்புவைக்கிறன் எண்டு நினைச்சு வேலியில் கிடந்த ஓணானை வேட்டிக்குள்ள விட்டதுதான் மிச்சம். அத்தநாயக்கவின்ர ராசி மஹிந்தவுக்கு வேலை செய்ததால, ஆருமே எதிர்பார்க்காத வகையில 'அப்புச்சி' ஆட்சியை இழந்து, தங்காலையில இருக்கிற ஹார்ல்டன் வீட்டில போய் குந்தவேண்டியதாப் போட்டுது. அதோட அத்தநாயக்க, அரசியலில இருந்து கொஞ்சநாள் ஒதுங்க, மஹிந்த குடும்பத்தைப் பிடிச்ச ஏழரையும் பறந்து பழையபடி ஆட்சி அவையின்ர கட்சிக்குப் போட்டுது. பிறகு திரும்ப அரசியலுக்குள்ள வந்த அத்தநாயக்க, சஜித்தோட ஒட்டிட்டார். இப்ப எல்லா எலக்சனிலையும் சஜித்தும் தோத்து, கட்சிக்குள்ளே அவரின்ர தலைமை ஊசலாடுற நிலைமை. எல்லாம் அத்தநாயக்க எண்ட புண்ணியவானின்ர ராசி.

இப்பிடியான ராசிக்காரர் அரசியல்வாதியளில மட்டுமில்லை. அதிகாரியளிலையும் இருக்கினம். இப்பவும் பொறுப்பான பதவியில இருக்கிற அதிகாரி ஒருத்தர் யாழ்ப்பாணத்தில யானையில 'விஜயம்' செய்யிற அமைச்சரான அக்கா ஒராளின்ர செல்லப்பிள்ளையா இருந்துதான் புரமோசன் எடுத்தவர். அவர் செல்லப்பிள்ளையா இருந்த ராசியால, அடுத்த முறை அந்த அக்காவுக்கு அமைச்சுப்பதவியும் இல்லாமல், எம்.பி. பதவியும் இல்லாமல் அரசியலை விட்டே ஒதுங்கிட்டா. அதால கூட்டமைப்பில இருந்த சிலருக்கு வால்பிடிச்சு தன்ர பக்கம் காத்துவரப் பண்ணினார் அதிகாரி. அதிகாரிக்குக் காத்து ஏறினாலும், அவருக்கு சப்போர்ட் பண்ணினவர் கூட்டமைப்பை விட்டுப் பிரிஞ்சுபோய் 'சித்தம்' கலங்கிற அளவுக்கு அரசியலில அடிவாங்கினார். ஆனால் அதிகாரி சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன் எல்லோ. அடுத்ததா அப்பிடியே வீணைப் பக்கம் பாய்ஞ்சார். வீணையின்ர நாதத்தோட வெளிமாவட்டத்தில இருந்து யாழ்ப்பாணத்துக்குத் திரும்ப வந்திட்டார். ஆனால் வீணைக்காரர்தான் பாவம். அடுத்த எலக்சனோட அமைச்சுப் பதவி இல்லாமல் காத்துப் போய் கைகட்டி நிக்கிற நிலைமை. வீணைக்காரர் வீணாப் போனதால அங்கையிருந்து அமுல்பேபி அரசியல்வாதியின்ர பக்கமா தாவினார் எங்கட அரசியல்வாதி. அமுல்பேபியை தொட்டிலில வைச்சு தாலாட்டிதான் நினைச்சதையெல்லாம் அந்த அதிகாரி சாதிச்சார். வாழ்க்கை ஒரு வட்டமெண்டதால, இந்த அதிகாரியின்ர ராசியால அமுல்பேபி அவுட்டாகி, திரும்பக் காத்து வீணைக்காரருக்கு ஏறிச்சுது. அவ்வளவுதான், பச்சோந்தியைவிட பட்டெண்டு கலரை மாத்திக்கொண்டு திரும்ப வீணைக்காரரோட பாலும் தேனுமா மாறிட்டார் இந்த அதிகாரி. பிறகென்ன, அதிகாரியின்ர பலன் வேலையைக் காட்ட, இப்ப வீணைக்காரர் தன்ர அரசியல்வாழ்க்கையிலையே முதல்முறையா எலக்சனில தோத்து, எம்.பி. பதவியும் இல்லாமல் நிக்கிறார். எல்லாருக்கும் தன்ர ராசிப்பவரைக் காட்டின அதிகாரி, இப்ப திசைகாட்டியின்ர அடிக்குரல் அமைச்சரோட வலு ஐக்கியமாம். பாவம் அமைச்சர், அதிகாரியின்ர ராசி அவருக்கு எப்ப வேலையைக் காட்டப்போகுதோ? எல்லாம் பிரமனுக்குத்தான் வெளிச்சம்.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே பரஸ்பரம் அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். முக்கியமான பிரமுகர்களின் தொடர்பும், அதனால் அனுகூலமும் உண்டாகும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச்செலவுகள் ஏற்படக் கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகமுடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது. வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும்.

**சிம்மம்:** மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயல்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்குத் தாய்மாமன் வழியில் ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு வெளியூரில் உள்ள கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு அவ்வப்போது மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் மனைவிக்கிடையில் பரபஸ்பரம் அந்நியோன்யம் அதிகரிக்கும். நீண்டநாளாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படக் கூடும்.

**மகரம்:** காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். அரசாங்க அதிகாரிகளின் அறிமுகமும், அவர்களால் ஆதாயமும் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். சிலருக்கு சிறிய அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும், உரிய சிகிச்சையினால் உடனே நிவாரணம் கிடைத்துவிடும்.

**மீனம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை. தாயின் உடல்நலனில் கவனம் தேவை.

# சுகநலக் கண்காட்சியும் நடைபவனியும்



யாழ்ப்பாணம், ஜுலை 23

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள், தாய்மார் கழகங்கள் ஆகியனவற்றின் ஏற்பாட்டில் இளையோர் சுகநலக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நடைபவனி என்பன நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றன.

உயிர்கொல்லி போதைப்பொருள் மற்றும் வீதி விபத்துகளிலிருந்து மீட்டெடுக்கும் வகையிலான விழிப்புணர்வு நடைபவனி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலிருந்து ஆரம்பமாகி தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை வரை முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவக்கலாநிதி ப.நந்தகுமார் தலைமையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் கவிஞர் அம்பி கலையரங்கில் மேடை நிகழ்வுகள் நடைபெற்றன. இதன்போது தாய்மார் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட தாச்சிப் போட்டியில் வெற்றியீட்டிய தாய்மார் கழகங்களுக்கான வெற்றிக்கேடயங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வுகளில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் வி.பி.எஸ்.டி.பத்திரண, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் சி.ஜெயக்குமார், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் திருமதி. சி.சுதீஸ்னர், வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோ.சுகிர்தன், யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் அதிபர் தில்லையம்பலம் வரதன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,66)

# செல்வச்சந்நிதியானுக்கு ஓக.23 இல் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜுலை 23

பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி பூங்காவனத் திருவிழாவும், 2ஆம் திகதி காலை 8மணிக்குக் கைலாச வாகனத் திருவிழாவும், 5ஆம் திகதி மாலை 6மணிக்கு சப்பறத் திருவிழாவும், 6ஆம் திகதி காலை 7மணிக்குத் தேர்த்திருவிழாவும், 7ஆம் திகதி காலை 8மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் அன்றையதினம் மாலை 6மணிக்கு மௌனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-41-17-100)

# முதியோர் கொடுப்பனவு விநியோகம்

சாவகச்சேரி, ஜுலை 23

தென்மராட்சி பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் ஜுலை மாத முதியோர் கொடுப்பனவுகள் நேற்று முதல் விநியோகிக்கப்படுகின்றன.

பிரதேச சமூக சேவைகள் அலகினால் கொடுப்பனவுக்குரிய பட்டியல் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் இந்தக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-9)

# மயிலிட்டி அம்பாள் ஆடிப்பூரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜுலை 23

மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன் துறை அருள்மிகு கண்ணகி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை ஆடிப் பூரத் திருவிழா இடம்பெறவுள்ளது. செல்வரத்தினம் குடும்பத்தினரின் உபயமாக இடம்பெற உள்ள ஆடிப்பூரத் திருவிழா அன்றைய தினம் பி.ப 3.30 மணிக்குக் கும்பபூசையுடன் ஆரம்பமாகி விசேட அபிசேகம் இடம்பெற்று மூலஸ்தான பூசை, வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து ஆராத்தி இடம்பெற்று அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலா வருதல் இடம்பெறவுள்ளது. (ச-25,100)

# ஆடிப்பூரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜுலை 23

பருத்தித்துறை கோட்டுவாசல் சண்டிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூரத் திருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் காலை 7 மணிக்கு விஷேட அபிசேகத்துடன் ஆரம்பமாகி அம்பாள் உள்வீதி, 2 ஆம் வீதி உலா இடம்பெறவுள்ளது. (ச-25,100)



# கலந்துரையாடல்

மன்னார், ஜுலை 23

ரைட்டு லைப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சுய தொழில் முனைவோர் மற்றும் ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகளுக்கான சிறப்புக் கலந்துரையாடல் வாழ்வுதயம் கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

இதன்போது எதிர்வரும் காலங்களில் மன்னார் மாவட்டத்தில் இயங்கிவரும் மனித உரிமைகள் முதலுதவி மையத்தின் ஊடாக செய்யவிருக்கும் செயற்பாடுகள் மற்றும் சுய முயற்சியாளர்களை ஊக்குவித்தல், ஊடகவியலாளர்களுடன் இணைந்து சமூக செயற்பாட்டாளர்களை இணைத்து செயற்பாடுகளை செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்து ஆலோசிக்கப்பட்டன. (ச-25,56)

# வண்ணை நாவலர் ம. வி. மாணவர் நாடாளுமன்றம்

யாழ்ப்பாணம், ஜுலை 23

யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான மாணவர் நாடாளுமன்றம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட தேர்தல்கள் திணைக்களப் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் ஆர். சசிலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# விழுங்குமா வரி?

'அமெரிக்கா விதித்துள்ள பரஸ்பரத் தீர்வை வரி விதிப்புத் தொடர்பான பேச்சுகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன என்றும், இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு அமெரிக்கா 30 வீத வரி விதித்துள்ள நிலையில் அதை மேலும் குறைப்பதற்கான முயற்சிகள் நடக்கின்றன' என்றும் இலங்கை அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது. ஆயினும் அந்தப் பேச்சுகளின் உள்ளடக்கங்கள் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அதேவேளை, அமெரிக்க வரி விதிப்பு விடயத்தில் அரசாங்கத்தின் நகர்வுகள் போதுமானவையாக இல்லை என்றே எதிர்க்கட்சிகள் தொடர்ச்சி யாகக் குற்றஞ்சாட்டுகின்றன.

அமெரிக்காவின் வரி விதிப்பால் பாரதூரமான நெருக்கடிகள் ஏற்படாது என்று அரசாங்கம் கூறுகின்றபோதும், அமெரிக்காவின் இந்த முடிவு இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை முற்றிலுமாக மறுத்துவிட முடியாது. இந்த வரி விதிப்பால் இலங்கையின் அமெரிக்க ஏற்றுமதிகள் குறைவதற்கான நிச்சயமான வாய்ப்புகள் உள்ளன. வரி விதிப்பால்ஏற்படும்விலைஅதிகரிப்புகளால்இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளான தேயிலை, ஆடைகள், இறப்பர் போன்றவற்றுக்கான கேள்விகளும் குறைவடையலாம். வியட்நாம், இந்தியா போன்ற நாடுகளின் ஏற்றுமதிகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் அதிகரித்தே காணப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன. அதனால் இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்கள் பிற நாடுகளின் ஏற்றுமதிப் பொருள்களுடன் போட்டியிட முடியாத நிலைமையும் ஏற்படும்.

இந்த நிலைமை நிச்சயம் இலங்கையின் ஏற்றுமதியுடன் தொடர்புடைய தொழில்துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். பிரதானமாக இந்தத் தாக்கம் ஆடை உற்பத்தித்துறையில் கடுமையாக உணரப்படும் என்பது துறைசார்ந்த நிபுணர்களின் கருத்தாக இருக்கின்றது. இந்த வரி விதிப்பு நீண்டகாலம் நீடித்தால் இலங்கை தனது ஏற்றுமதிச் சந்தைகளை மாற்றிக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுத்தப்படும். புதிய ஏற்றுமதிச்சந்தைகளில் இலங்கை தனது பொருள்களுக்கான கேள்வியை அதிகரிப்பது அவ்வளவு இலகுவானதாகவும் இருக்கப்போவதில்லை.

அந்நியச் செலாவணிக்காக ஏற்றுமதி வருமானம், சுற்றுலாத்துறை ஆகியவற்றை மட்டும் நம்பியிருக்கும் இலங்கை போன்ற நாட்டுக்கு இந்த நிலைமை பெரும் சவாலானதாகவே இருக்கும். இந்த விடயத்தை கமுக்கமாகக் கையாண்டு, நிலைமையைத் தற்காலிகத் தீர்வுகள் மூலம் கடக்க எத்தனித்தால் அது எதிர்காலத்தில் நாட்டுக்கும், மக்களுக்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆகையால் அரசாங்கம் இந்த நெருக்கடிக்கான தீர்வுகளை நோக்கித் தற்போதே காலடி எடுத்து வைப்பது அவசியம். அமெரிக்காவின் வரி விதிப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதேநேரத்தில், உள்நாட்டு உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதும், இந்த வரி விதிப்பால் பாதிக்கப்படும் தொழில்துறைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை எடுப்பதும் முக்கியமானது. அரசியல் இலாப, நட்டக் கணக்குகளைக் கைவிட்டு அரசாங்கம் இந்த விடயத்தில் இன்னும் தீவிரம் காட்ட வேண்டும். இல்லையேல் வரி விழுங்கிய நாடாக இலங்கை மாறிவிடலாம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

சொல்லில் இங்கிதம் என்பது
திறமையாகப் பேசுவதைவிட சிறந்தது.

– பேகன் –




# நாட்டில் ஏ.ஐ. மேம்பாட்டுக்காக சிங்கப்பூருடன் கைகோர்ப்பு



கொழும்பு, ஜூலை 23

**இலங்கையின் டிஜிற்றல் பொருளாதார அமைச்சகத்துக்கும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்துக்கும் இடையில் முன்மொழியப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**

இந்த ஒப்பந்தம் இலங்கையில் செயற்கை நுண்ணறிவு மேம்பாட்டுக்கான ஒரு முக்கியமான படியாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
உள்நாட்டு மற்றும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஏ.ஐ. தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கான கூட்டு ஆராய்ச்சி முயற்சிகளைத் தொடங்குதல், ஏ.ஐ.திட்டங்களை நடத்துதல் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்குதல், ஏ.ஐ. மேம்பாட்டிற்கான மூலோபாய இலக்குகளுக்கு பங்களிக்கக் கூடிய நேரடிக் கூட்டாண்மைகள் மற்றும் அறிவுப் பரிமாற்ற வாய்ப்புகளை ஆராய்தல் என்பவை தொடர்பில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் கீழ் செயற்படும் "ஏ.ஐ.சிங்கப்பூர்" எனும் திட்டத்துடன் பேச்சு நடத்தப்பட்டது. இதன்மூலமாக இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்துவதற்காக டிஜிற்றல் அமைச்சராக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்வைத்த இந்த முன்மொழிவுக்கே அமைச்சரவை அனுயளித்துள்ளது. (ச-இ)

# இணைய அச்சுறுத்தல்கள் கண்டறிய ஆராய்ச்சிப்பிரிவு

கொழும்பு, ஜூலை 23
இணைய அச்சுறுத்தல்களைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிப் பிரிவை நிறுவுவதற்கான திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. இணைய அச்சுறுத்தல்களைக் கண்டறிதல் மற்றும் எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துதல், தீங்கிழைக்கும் மென்பொருள் பகுப்பாய்வுத் திறன்கள் மற்றும் மனிதவள திறனை மேம்படுத்துதல், இணைய பாதுகாப்புத் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வது என்பன இந்தப் பிரிவின் பணிகளாக அமையவுள்ளன. டிஜிற்றல் அமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்த முன்மொழிவுக்கே அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.
(ச-இ)

## ஊழல் முறைகேடு
# 31 அரச அதிகாரிகள் 7 மாதங்களில் கைது

கொழும்பு, ஜூலை 23
நடப்பு ஆண்டின் ஏழு மாத காலப்பகுதிக்குள் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் அரச அதிகாரிகள் 31 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கான விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களில் பாடசாலை அதிபர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள். தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் உள்ளடங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# நிட்டம்புவவில் தீவிபத்து

கொழும்பு, ஜூலை 23
கொழும்பு நிட்டம்புவ நகரில் அமைந்துள்ள கட்டடமொன்றில் தீப்பரவல் நேற்று ஏற்பட்டுள்ளது.
இதன் காரணமாக கொழும்பு நோக்கிய வீதியில் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது. தீ விபத்து இடம்பெற்றமைக்கான காரணம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# சந்திரனில் எடுத்த மண் கொழும்பில் பார்வைக்கு

கொழும்பு, ஜூலை 23
சந்திரனில் இருந்து எடுத்துவரப்பட்ட மண் மற்றும் பாறைகளின் மாதிரிகளை கொழும்பிலுள்ள தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் இயற்கை விஞ்ஞான நூதனசாலைப் பார்வைக்கூடத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. 1969ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் திகதி நிலவில் முதல் மனிதராக நீல் ஆம்ஸ்ட்ரோங் காலடியெடுத்து வைத்தபோது எடுத்துவரப்பட்ட மண் மற்றும் பாறைகளின் மாதிரிகளே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தேசிய நூதனசாலையில் மிக விரைவில் சந்திரன் மற்றும் நிலவுக்கான மனிதர்களின் பயணம் குறித்த விவரங்கள் உள்ளடங்கிய காட்சிக்கூடம் ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளது. (ச-இ)

நாளை
வியாழக்கிழமை - ஆடி 08
24.07.2025
சுபநேரம் : 07.32 - 09.02
ராகுகாலம் : 01.32 - 03.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## அமரர் சிவசுப்பிரமணியம் பழனி

அளவாவோடை சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், கோட்டைக் காடு மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவசுப்பிரமணியம் பழனி அவர்கள் நேற்று (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம்-மகேஸ்வரி தம்பதியின் அன்பு மகனும் கந்தசாமி-மாணிக்கம் தம்பதியின் பாசமிகு மருமகனும் நிர்மலாதேவி (ஆயுள்வேத வைத்தியர், சமாதான நீதவான்) அவர்களின் அன்புக் கணவரும் ருதாங்கன் (சுவிஸ்), சஞ்சய் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாருணியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற வெற்றிவேல் மற்றும் சிவமலர், கலாநிதி சிவகுமார், சிவநேசன், சிவமூர்த்தி, பாஸ்கரன், றஜனி ஆகியோரின் சகோதரனும், செல்வநாயகி, சத்தியநாதன், சறோஜாதேவி, சிவநாதன், ஜோதீஸ்வரன், லோகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2025) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

# INVITATION FOR BID 2025/09
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The **Chairman, Divisional Proc urement Committee**, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via PSDG & Maintenance
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Document
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-07-23 To 2025-08-06** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T. P:021-205-8865, e-mail: pmdveps@gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.


| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-07-23 To 2025-08-06 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-07-30 |
| | Closing and Opening of Bids | At 3.00 P.M on 2025-08-07 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft / Security Deposit | | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/JAF/VEPS/ 2025/OS/02 | Improvement of public library and sub office building at Kopay | 1.19 | 49 | C9 or above (Building) | 1,000.00 | 12,000.00 | 23.10.2025 | 49 |
| MA/NP/JAF/VEPS/ 2025/ LAR/02 | Renovation of New Chemmani Road (Balance work) at Irupalai south | 0.75 | 49 | C9 or above (Highway) | 1,000.00 | 8,000.00 | 23.10.2025 | 49 |

Chairman
Divisional Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha,
Puttur .

# மரண அறிவித்தல்

## அமரர் கணபதிப்பிள்ளை தவமணி



தோற்றம்
27.08.1948

மறைவு
21.07.2025

மறுவன்புலவைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாழ் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தவமணி அவர்கள் நேற்று (21.07.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தாமு-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும், கிருபாதேவி அவர்களின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பாலச்சந்திரனின் பாசமிகு மாமியாரும், கோவரதன் (UK), கௌசிகன் (Canada), தாட்சாயினி (ஆசிரியர்-கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம்), தனுசா, சஞ்சிகா, றமணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆதிரன், நிலா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2025) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் எழுதுமட்டுவாழ் இராமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
பேரன்- 077 700 7474

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர விழிகளுடன் 3ம் ஆண்டு நினைவு



தாயின் மடியில்
12 . 11 . 1977

காலனின் பிடியில்
27 . 07 . 2022

## அமரர் தங்கராசா செந்தில்குமரன்

திதி :- தேய்பிறை சதுர்த்தசி (23.07.2025)

பாசமே எங்கள் அப்பா-பாதியிலே சென்றீரோ
எம்மைப் பரிதவிக்க விட்டு
உங்களோடு இருந்த காலம் கொஞ்சமே இருப்பினும்,
அப்பா நீங்கள் தந்த சந்தோசங்கள் நிறையவே
விடியலில் வரும் சூரியனும் உங்களைப் பார்க்கிறது.
இரவில் வரும் நிலவும் உங்களைக் கணகறது.
தினமும் உங்களை நினைக்கும் எங்களால் மட்டும்-
அப்பா உங்களைப் பார்க்க முடியவில்லையே.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

உங்கள் நினைவால் வாடும்
குடும்பத்தினர்

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல - J/1594 பதிவு திகதி - 11.03.1972

### தொழிலாளி

01. **பதவி - தொழிலாளி(03)**

குறியீட்டு இல. - 318/17 (02/2025 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் - 31515- 330X10-345X10-38265
பால் - ஆண்/பெண்

**தகைமைகள்:-(01/2021 இன் படி)**

அ) 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு :-

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழ சட்டப்பிரமாணங்களிற் கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி – 05.08.2025**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணபத்தினை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் தொழிலாளி (318/17) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். டச்சு வீதி சாவகச்சேரி எனும் முகவரிக்கு 05.08.2025ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்
டச்சு வீதி
சாவகச்சேரி.
23.07.2025

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்
திரு.சி.சுதர்சன்

அரகலயவில் ஏற்பட்ட கலவரம்

# தென்னக்கோனை விசாரிக்க எந்தத் தடைகளும் இல்லை

## உயர்நீதிமன்றம் நேற்று அதிரடி

கொழும்பு, ஜூலை 23

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக, காலிமுகத்திடலில் இடம்பெற்ற அரகலய போராட்டங்களின்போது வெளிநபர்களால் ஏற்படுத்தப்பட்ட கலவரங்கள் தொடர்பில், பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை விசாரிக்க எந்தத் தடையும் இல்லை என்று உயர் நீதிமன்றம் நேற்று தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது, தேசபந்து தென்னக்கோன் மேல் மாகாணத்தின் பிரதி பொலிஸ்மா அதிபராகச் செயற்பட்டார். இந்தக் கலவரங்கள் தொடர்பில் தென்னக்கோனை சந்தேகநபராகப் பெயரிமாடு சட்டமா அதிபரால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பிய கடிதத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் வலுவற்றதாக்கியிருந்தது. இந்த வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்பட்டபோதே, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இடைக்காலத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், அரகலய போராட்டங்களின்போது வெளிநபர்களால் ஏற்படுத்தப்பட்ட கலவரங்கள் தொடர்பில் தேசபந்து தென்னக்கோனிடம் விசாரணைகளை நடத்தவும், வழக்குத் தொடரும் ஏதுவான சூழ்நிலைகள் உருவாகியுள்ளன. (அ-ம-இ)

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
## பெறுகை அறிவித்தல்.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைக்கான தேசிய பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | ஒப்பந்த காலம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | கேள்வி வங்கி பிணைப்பணம்/ காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| I | KN/EB/13/ W.H/25/ 1114-05 | Construction of Paddy Drying Yard Warehouse at Kanagambikaikulam, Kilinochchi, | 90 நாட்கள் | 3.9 மில்லியன் | C9 or above, Building | ரூபா. 60,000/- 18.11.2025 வரை | 2000.00 |


1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I நிர்மாணப் பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்தத்தாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தத்தார் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச்செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 24.07.2025ஆம் திகதியிலிருந்து 05.08.2025ஆம் திகதி வரை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப் பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) 01.08.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "KN/........................" என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 06.08.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**சு.முரளிதரன்**
**திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் / மாவட்டச் செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 09 . 1943



இறப்பு 22 . 07 . 2025

## அமரர் வல்லிபுரம் பெரியதம்பி
(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)

பருத்தித்துறை தும்பளையை பிறப்பிடமாகவும், 3ம் ஒழுங்கை, காத்தார் சின்னக்குளம் வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பெரியதம்பி அவர்கள் நேற்று (22.07.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-சின்னப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவயோகம் அவர்களின் அன்புக் கணவரும் இளையதம்பி, சந்திராதேவி, ஆகியோரின் அன்புச் சகோதரரும், நிரஞ்சனாதேவி (விரிவுரையாளர்-வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி), இளங்குமரன் (கல்வி இணைப்பாளர், உயர் தொழிநுட்ப நிறுவகம்-ஓமந்தை, வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அரவிந்தன் (நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட செயலகம்-வவுனியா), பிரபாங்கனி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற்துறைத் திணைக்களம் மாவட்ட அலுவலகம், கச்சேரி-வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷேக், வர்ஷாயினி, வேதிகா, பிரீத்திகா, கார்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2025) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**3ம் ஒழுங்கை,**
**காத்தார் சின்னக்குளம் வீதி,**
**வவுனியா.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 616 2010**

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 11 காரைதீவு வீதி, ஆதன இல 281 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

செபஸ்ரியாம்பிள்ளை பிரான்ஸிஸ்கம்மா 30.04.2024ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ரி.எம்.அன்ரனிப்பிள்ளை முகதாவில் 2230ம் இலக்க பிரகடன உறுதியில், ஆதனத்தின் உறுதிகள் அண்மைக்கால இடம்பெயர்வின் போது தவறிவிட்டன அவற்றை இதுவரை எங்கு தேடியும் கிடைக்கவில்லை எனவும், எனது நீண்டகால ஆட்சியுமானதும், எனஉறுதிப்படுத்தி பிரகடனப்படுத்துகிறேன்.

குறித்த ஆதனத்தை யோஜ் மரியதாஸ்சும் பெண் பிரான்சிஸ்கம்மாவும் 30.12.2012 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் 1612ம் இலக்க நிபந்தனை அறுதி மூலம் கிறிஸ்ரியன் சிலுவைதாஸன் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை கிறிஸ்ரியன் சிலுவைதாசனும் பெண் சிசலியம்மாவும் 14.12.2013 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் 1937ம் இலக்க அறுதி உறுதி மூலம் யோஜ் மரியதாஸ்சும் பெண் பிரான்சிஸ்கம்மா என்பவருக்கும் வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை, யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/85ம் இலக்க கிராமஅலுவலர் பிரிவில் "சுரிவெளிக்காடு" நிலப்பரப்பு 03 குளி 16.12 (நிலப்பரப்பு மூன்று குளி பதினாறு தசம் ஒன்று இரண்டு) உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி.புஸ்பராஜா அவர்களால் 23.01.2004ம் திகதி அளந்து விபரித்த 2272ம் இலக்க படத்தின்படி துண்டு-2

இதற்கு எல்லைகள்:-

கிழக்கு: காரைநகர் வீதி.
வடக்கு: அமலதாஸ் யூடித்மெலானின் ஆதனம்.
மேற்கு: கடற்கரை வீதி.
தெற்கு: அரசாங்க காணி.

இதடங்கலும்:

தற்போது இவ்வாதனத்தை யோஜ் மரியதாஸ்சும் பெண் பிரான்சிஸ்கம்மா உம் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது யோஜ் மரியதாஸ்சும் பெண் பிரான்சிஸ்கம்மா உம் என்பவர் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல, என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

# மூன்று ஆண்டுகளுக்கு தேர்தல்கள் நடக்காது!

## வாக்களிக்காதோருக்கு அபாரதம் விதிக்கவும் யோசனை

கொழும்பு, ஜூலை 23

அடுத்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு நாட்டில் எந்தத் தேர்தலுக்கும் வாய்ப்பில்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் ஜெனரல் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

2026ஆம் ஆண்டு தொடக்கம் 2029 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்துக்கான தேர்தல் ஆணையத்தின் மூலோபாயத் திட்டத்தை தயாரிக்கும் கலந்துரையாடல் நேற்று நடத்தப்பட்டது. இதன் போதே, எதிர்வரும் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு தேர்தல் நடத்தப்பட வாய்ப்பில்லை என்று கூறியுள்ளார். 'நாட்டில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் வாக்களிப்பதை கட்டாயமாக்கவும், வாக்களிக்காதவர்களுக்கு அபராதம் விதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தேர்தலுக்கும் ஏற்படும் பெரும் செலவைக் கருத்தில் கொண்டு, தேர்தலில் சரியான முடிவுகளை அடைவதே இந்த முடிவை எடுத்ததற்கான காரணம்' என்றும் தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-இ)

# அளவுக்கு அதிக சுமை; குடைசாய்ந்தது ஹன்ரர்

அளவுக்கு அதிகமான நெல் மூடைகளை ஏற்றிக்கொண்டு பயணித்த ஹன்ரர் ரக வாகனம், மிகையான சுமை காரணமாக குடைசாய்ந்தது. கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு முன்பாக நேற்று மாலை இந்த விபத்து இடம்பெற்றது. குடைசாய்ந்த ஹன்ரரை மீண்டும் தூக்கி நிறுத்தும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டது. இந்த விபத்துக் காரணமாக, அந்த வீதியால் சில மணி நேரம் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கண்ணீர் அஞ்சலி



யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்

**திரு. கந்தசாமி சசிகரன்**

அவர்களின் அன்புத் தாயாராகிய

**சிவப்பாக்கியம் கந்தசாமி**

அவர்களின் பிரிவால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம் 08.03.1950 மறைவு 22.07.2025

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவு சங்கம்.

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 . 10 . 1995



இறப்பு 19 . 07 . 2020

எங்கள் பாசத்தின் செல்லம்

## அமரர் இராசேந்திரம் நிலுஜன்

அவர்களின்
ஐந்தாம் ஆண்டு நீங்கா நினைவு அலைகள்
நாட்கள் நகர்கிறது
வருடங்கள் ஓடுகிறது
ஆனாலும் நிலுஜா !!
நினைவுகள் என்றும் கண்ணீர் துளிகளாய்,
எங்கள் இதயங்களில் நித்தமும் வாழ்கின்றீர்
உமது ஆத்மா சாந்தி அடைய
நல் இறை வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி .

பசுபதியார் வீதி,
சங்கத்தானை,
[illegible]

பாசத்துடன்
அப்பா, அம்மா, அண்ணன்மார்
கோபிகன் (கனடா), யுகதர்சன் (பிரான்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நேரங்களில் நீங்கள் வெற்றிபெறுகிறீர்கள், சில நேரங்களில் நீங்கள் கற்றுக்கொள்கிறீர்கள்.

- பில் மெக்ரா

புதன் பொய்கை

23.07.2025
புதன்கிழமை

# ஜூலைக் கலவரம்




## இலங்கையின் வரலாற்றையே மாற்றி எழுதிய திருநெல்வேலி

ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

### கொழும்பில் புலிகள் பதற்றம் உச்சம்!

மற்றுமொரு சம்பவம். அது கொழும்பு புறக்கோட்டையில். புறக்கோட்டை ரயில் நிலையம் முன்பாக.

கொழும்பில் உள்ள சிங்கள மக்களை கடும் அச்சத்துக்குள் தள்ளிய சம்பவம். பலரை வேறு இடங்களுக்கு ஓடவிட்ட சம்பவம்.

என்ன அது...???

நிரம்பிவழிகிறது ரயில் நிலையம். சொந்த ஊர்களுக்குத் தப்பி ஓடும் மக்கள் கூட்டம் அது. எல்லா இன மக்களும்தான் அங்கு. அவர்கள் உண்பதற்கு உணவில்லை. அத்தனை பேரும் பசியில். முகங்களில் அச்சம். வயிற்றில் பசி. உணவு அல்ல, உயிர்தான் முக்கியம். ரயில் வந்தால் போதும். தப்பியோடுவதற்கு. அதுதான் அவர்களின் பிரார்த்தனை. கூடவே பாதுகாப்புக்கு பொலிஸாரும் இராணுவமும் அங்கு.

சூழவுள்ள கட்டடங்கள் எல்லாவற்றிலும் தீ. தமிழர்களின் வர்த்தக நிலையங்கள் எல்லாம் சாம்பல். திரும்பும் திசையெல்லாம் புகை மண்டலம். ரயில் நிலையத்தை ஊடறுத்துச்செல்கிறது அது. கருமேகமாய் புறக்கோட்டை. தள்ளி நிற்பவரைக்கூட அடையாளம் காணமுடியாநிலை. ரயில் நிலையம் முன்பாகவும் ஒரு கூட்டம். அதுவும் பயணிகள் கூட்டம். கூடவே இராணுவமும்.




எல்லோரும் பதற்றத்தில் எல்லோரும் அச்சத்தில். இப்படியே இருக்கையில்...ஒரு சத்தம். 'இந்தா புலி வந்துட்டானுகள். புலி வந்துட்டானுகள்." இந்தச் சத்தத்தைக் கேட்டதும் கொதிகொள்கிறது ரயில் நிலையம். கலவரமடைகிறார்கள் மக்கள். ரயில் நிலையத்திற்கு எதிர்த்திசையில் இருந்துதான் அந்தச் சத்தம். அங்கே ஒரு கூட்டம். அவர்கள் சிங்களவர்கள். கத்துபவர்கள் அவர்கள்தான்.

எரியும் கட்டடம் ஒன்றைச் சுட்டிக்காட்டியவாறு, ரயில் நிலையத்தை நோக்கி ஓடிவருகிறார்கள்.... படையினர் அந்தக் கட்டடத்தைப் பார்க்கிறார்கள். ஆம்... உண்மைதான். யாரோ சிலர் அங்கே. ஆயுதங்களுடன் சீருடையுடன். தோற்றம் தெளிவில்லை. மங்கலாகத்தான் தெரிகிறது. அவர்களைத் தாக்குவதற்குத் தயாராகிறது இராணுவம்.

'எல்லோரும் கீழே படுங்க' இராணுவம் உத்தரவு. எல்லோரும் வீழ்ந்து படுக்க, அந்தக் கட்டடத்தை நோக்கித் துப்பாக்கிச்சூடு. பதிலுக்கு அவர்களும் அங்கிருந்து. எல்லோருக்கும் மரண பயம்.

ஐந்து நிமிடங்கள்தான் அந்தச் சண்டை. அப்படியே நிற்கின்றன சத்தங்கள். மெல்ல எழும்புகிறார்கள் படையினர். கூடவே பயணிகளும்.

ஓடுகிறார்கள் பயணிகள் ரயில் நிலையத்துக்குள்ளே. தணிகிறது மக்களின் பயம்.

காரணம்...???

அவர்கள் புலிகள் அல்லர். இராணுவம்தான். பின்னர்தான் தெரியவருகிறது.

எரிகின்ற அந்தக் கட்டடத்துக்குள் யாரும் சிக்கியுள்ளார்களா? என்று தேடிப் பார்ப்பதற்காகவே அங்கு சென்ற படையினர் அவர்கள். அவர்களைக் கண்ட சிலர் புலிகள் என்று நினைத்ததால்தான் இந்தக் குழப்பம். புகைதான் காரணம். தெளிவற்ற தோற்றம். அதனால்தான் ஏற்பட்டது குழப்பம்.

செய்தி கொழும்பெங்கும் தீயாய் பரவுகின்றது. உள்ளபடியல்ல. இன்னும் கொஞ்சம் சேர்த்து. கண் மூக்கு வாயெல்லாம் வைத்து.

'கோட்டையில் புலியாம். புலிக்கும் ஆமிக்கும் சண்டையாம். அதிக சேதமாம். நிறைய செத்ததாம். வன்முறையைத் தூண்டுவதற்கு வசதியாக இப்படித்தான் பரவுகிறது அந்தச் செய்தி அந்த வதந்தி.... எங்கும் அதே கதைதான். சிங்களவர்கள் இடம்பெயரவும் செய்தார்கள். பிறகுதான் தெரியவருகிறது உண்மை அவர்களுக்கு. இருந்தாலும் பயம் போகவில்லை சிங்களவர்களுக்கு.

புலிகள் கொழும்புக்கு வருவார்கள். தம்மைத் தாக்குவார்கள் என்றே நம்பினார்கள் சிங்களவர்கள். கொழும்பில் அவ்வளவு அழிவு அவ்வளவு சேதம் தமிழர்களுக்கு. ஆதலால், இதற்குப் பழிவாங்க எப்படியும் புலிகள் வருவார்கள் என்றே நம்பினர்.

பொலிஸாரும் நம்பினர். இதனால் வித்தியாசமான பாதுகாப்பு ஏற்பாட்டில் அவர்கள். கிருளப்பனைப் பொலிஸ் நிலையத்தில் அனைத்துப் பொலிஸாரும் சிவில் உடையில்.

வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில்...? அங்கு வேறு விதமான ஏற்பாடு. அங்கு ஒரு மரம். பெரிய மரம். அதிகமான பொலிஸார் அதற்கு மேல்தான். அந்த இரவு முழுவதும். இப்படித்தான் அஞ்சி நடுங்கியது கொழும்பு.

ஆனால், புலிகள் வரவுமில்லை தாக்குதல் நடத்தவுமில்லை. எல்லாம் வதந்தி. இனக்கலவரத்தைத் தூண்டுவதற்கான ஏற்பாடு. கொழும்பில் நடந்த சம்பவங்களுள் ஒன்று இது. இப்படி இன்னும் பல. அதிலும் கொடூரம் என்ன தெரியுமா...??? இதற்கு மறுநாள் அந்த நிலையத்துக்குள் நடந்த படுகொலைதான்... எரித்துக்கொல்லப்படுகிறார்கள் 9 அப்பாவித் தமிழர்கள்.

விரிவாகப் பார்ப்போம் அடுத்த தொடரில்...


புலிகள் வரவுமில்லை தாக்குதல் நடத்தவுமில்லை. எல்லாம் வதந்தி. இனக்கலவரத்தைத் தூண்டுவதற்கான ஏற்பாடு. கொழும்பில் நடந்த சம்பவங்களுள் ஒன்று இது. இப்படி இன்னும் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சி.உருத்திரலிங்கம் எழுதிய ஒப்பந்த முகாமைத்துவம்

# நிர்மாணத்துறை சார்ந்த சட்டங்களை எளிதாகச் சொல்லும் பொக்கிஷம்





யாழ்ப்பாண மண்ணின் மைந்தனும், பொறியியல் துறையில் நீண்ட அனுபவசாலியாகவும் திகழும் சி.உருத்திரலிங்கம் தனது கடந்தகால அனுபவத் திரட்சியின் தொகுப்பாக மிக எளியநடையில் யாத்துத் தந்திருக்கும் அருமையான பொக்கிஷமே ஒப்பந்த முகாமைத்துவம் என்ற நூலாகும்.

முக்கியமான 13 பிரதான தலைப்புகளையும் அதனோடு பல்வேறு உப தலைப்புகளையும் கொண்டு இந்தப் புத்தகம் நகர்கின்றது. கட்டட நிர்மாணத்துறை சார்ந்த பல்வேறு விடயங்களை மிக எளிதாக அழகு தமிழில் விளக்குகின்ற ஒரு அரிய முயற்சியாகவே இந்நூலைப் பார்க்கமுடிகின்றது.

நிர்மாணத்துறைக்குள் அல்லது ஒப்பந்தங்கள் மேற்கொள்வதற்காக அல்லது ஒரு பொறியியலாளனாக தனது பணிகளை ஆரம்பிக்கின்ற ஒரு இளநிலை பொறியியலாளனுக்கு இந்த நூல் மிகச்சிறந்த வழிகாட்டுதலை வழங்கக்கூடியது.

ஆரம்ப வேலைகள், நிர்மாணவேலை ஆரம்பித்தலுக்கான அடித்தளம், நிர்மாண வேலைகளின்போது கவனிக்கவேண்டிய விடயங்கள், வேலைகள் நிறைவேற்றுகையில் ஏற்படும் தடங்கல்கள், வேலை முன்னேற்றக் கட்டுப்பாடு, தாமதங்களுக்கான தண்டங்கள், வேலை முடிவுபெறல், பிணக்குகளுக்குத் தீர்வுகளைக் காண்பதற்கான வழிமுறைகள், பொதுச்சட்டங்களும் அதனைப் பாவிப்பதற்கான வழிமுறைகளும், குடியியல் சட்டங்களும் அவற்றின் பிரயோகங்களும் உள்ளிட்ட பிரதான 13 தலைப்புகளோடு இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

வழக்கு ஆய்வுகள், மாதிரிக் கடிதங்கள் எனும் இரு பகுதிகளும் இன்னும் இந்த நூலின் தரத்தை மெருகேற்றிக் காட்டுகின்றன, சாதாரணமாக நடைமுறையில் எதிர்கொள்கின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு இந்நூல் எளிய முறையில் தீர்வுகளைத் தருகின்றது. 162 பக்கங்களில் தரமான அச்சுப்பதிப்பில் கண்ணுக்குக் கவர்ச்சியாக இந்நூல் அச்சேற்றப்பட்டுள்ளமை கூடுதல் சிறப்பாகும்.




## ஒரு குடை: ஒரு காதல் நூல் வெளியீடு


வயவை லம்போ எழுதிய, 'ஒரு குடை: ஒரு காதல்' நூல் வெளியீடு, வயாவிளான் றோ.க.த.க. பாடசாலையில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

விழா, மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி, வரவேற்பு நடனம் மற்றும் வரவேற்புரைமூலம் விழாவின் மகத்துவத்தை மேலோங்கச் செய்தது. நூல் அறிமுகத்தை யாழ். ஊரெழு கணேச வித்தியாலய அதிபரும் கவிஞருமான இரா.ஜெயக்குமார் வழங்கினார்.

நூல் ஆய்வுரையை தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் துரைராசா கோணேஸ்வரன் நிகழ்த்தினார்.

விழாவின் முக்கியமான அம்சமாக, நூலை வெளியிட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் த.றொபேட் அருட்சேகரனிடம் இருந்து, அதன் முதற் பிரதியை பழைய மாணவரான சுதாகரன் சுப்பிரமணியம் பெற்றுக்கொண்டார்.






# காட்டுப்பழங்கள் பூநகரியின் கொடை

## இயற்கை மருத்துவத்தை உணர்த்தும் படைப்பு

**கவிஞர் சரசாலையூரான்**
*ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்*

ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் கா.குலசேகரத்தால் ஆய்வுசெய்து எழுதப்பெற்ற, 'காட்டுப்பழங்கள் பூநகரியின் கொடை' என்ற நூல் பூநகரிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் வெளியிடப்பட்டுள்ளது. நூலாசிரியர் பூநகரி மண்ணின் மைந்தன் பூநகரிச் சித்தன் குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டவர். ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய ஆலோசகராக 25 வருடங்கள் சேவையாற்றியவர். கலையார்வம் மிக்கவர். எழுத்துத் துறையில் நாட்டம் கொண்டவர். விருதுகள் பல பெற்றவர். அவர் தனது இளமைக்கால வாழ்வியல் அனுபவங்களையும் மேலதிக தேடல்களையும் அடிப்படையாகக்கொண்டு இந்நூலை எழுதியுள்ளார்.


*'மருந்தன வேண்டாவாம் யாக்கைக்கு*
*அற்றது போற்றி உணின்.'*

என்ற வள்ளுவர் பெருந்தகையின் குறள் சிந்தனை வழி நின்று இந்நூலை யாத்துள்ளமை மிக முக்கியமான சிறப்பம்சம் ஆகும். மனித வாழ்வில் உடல் உள ஆரோக்கியத்தோடு, நோய் நொடி இன்றி வாழ்வதற்கு காட்டுப்பழங்கள் மருந்தாகின்றன என்பதை, பழங்களின் குணவியல்புகளை நோய்களுடன் தொடர்புபடுத்திக் கூறியிருப்பது பாராட்டத்தக்கது. இந்த நூலை வாசிப்போர், குறிப்பாக இளைய தலைமுறையினர், குறித்த பழங்களைத் தாமாகவே தேடிப் பெற்று, உண்டு ஆரோக்கியமாக வாழ வழிகாட்டியுள்ளார் எனலாம். அந்தவகையில் பூநகரியில் காணப்படும் 32 வகையான பழங்கள் பற்றியும் அவற்றின் வடிவங்கள், நிறம், குணம் பற்றியும் தாவரவியல் பெயர்கள், வேற்றுமொழிப்பெயர்கள், பழங்களின் மருத்துவக் குணங்கள், பழங்களில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துகள், பழங்கள் உண்ணும் முறைகள் எனப் பல்வேறு பயனுள்ள விடயங்களை உள்ளடக்கி 'காட்டுப்பழங்கள் பூநகரியின் ஒரு கொடை' என்ற நூல் வெளிவந்துள்ளது.


இத்தகைய நூல் ஆக்க அணுகுமுறை வாசிப்போருக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை. பழங்களின் மருத்துவக் குணங்களைப் பொறுத்தவரை என்னென்ன நோய்களுக்கு என்னென்ன பழங்களை உண்ணவேண்டும் என்பதைக் கூறியிருப்பது வாசிப்போருக்கு மிகுந்த பயனுள்ளதாக அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக வீரைப்பழங்களை உண்பதால் சீதாபேதி விலகும், மலேரியா, முடக்குவாதம், புரையழற்சி, கட்டிகள், புண்கள், தலையிடிகள், சீறுநீரகப் பாதைத்தொற்று முதலான நோய்களுக்கு எதிரான சக்தியை வீரைப்பழம் வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய பழச்சந்தையிலே மரபணுமாற்றம் செய்யப்பட்ட பழங்களும் இரசாயனத்தால் பழுக்கச் செய்யப்பட்ட பழங்களுமே அதிகம் கிடைக்கின்றன. இவை புற்றுநோய்க்கு அடிப்படையாகின்றன. குறிப்பாக மரபணுமாற்றம் செய்யப்பெற்ற விதை இல்லாத பழங்கள் புற்றுநோய் செல்களைத் தோற்றுவிக்கின்றன. ஆனால் தமது காடுகளில் உள்ள பழங்கள் புற்றுநோயை வராமல் தடுக்கின்றன என்ற அறிவியல் சிந்தனையை ஆசிரியர் முன்வைத்திருப்பது இன்றைய இளைய சமூகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமிக்ஞை விளக்குகளின் இன்றியமையாத் தன்மை



மருத்துவர் பா.சயந்தன்
*குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்*
*யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும்*
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*மருத்துவபீடம், யாழ்ப்பாணம்*

அனுதினமும் விபத்துகளால் பல உயிர்கள் எம்மிடமிருந்து பறிபோகின்றன. இவற்றில் அனேகமானவை, சமிக்ஞை விளக்குகளையும், வீதிக் குறியீடுகளையும் சரிவரக் கடைப்பிடிக்காததால் ஏற்பட்ட விபத்துகளாகவே அமைந்துள்ளன. எனவே, விபத்துகளை முடிந்தளவு தவிர்க்கும் வகையில் நாங்கள் எவ்வாறு செயற்படமுடியும் என்பதை, 'ஒரு சாரதி' என்ற மனநிலையில் இருந்து விளக்குகின்றது இந்தக் கட்டுரை.

வீதிக் குறியீடுகளையும், போக்குவரத்து நெறிமுறைகளையும் சரிவரக் கடைப்பிடிக்கும் பட்சத்தில் ஏராளமான விபத்துகளை நாங்கள் தவிர்க்கமுடியும். இதன்படி,

**சமிக்ஞை விளக்கை கவனியுங்கள்**

- பச்சை என்றால் நேராக மட்டும் செல்லுங்கள், குறியீட்டுப் பலகைகள் திரும்ப அனுமதித்தால் மாத்திரம் திரும்புங்கள்.
- மஞ்சள் என்றால் நிறுத்தத் தயாராகுங்கள், வேகமாக செல்லவேண்டாம்.
- சிவப்பு என்றால் முழுமையாக நிறுத்துங்கள். முன்னோக்கி மெதுமெதுவாக செல்ல வேண்டாம்.

**வாகனக் குறிகாட்டிகளை சரியாகப் பயன்படுத்தவும்**

- திரும்புவதற்கு குறைந்தது 5 விநாடிகளுக்கு முன் உங்கள் குறிகாட்டியை இயக்கவும்.
- இடதுபுறம் திரும்புவதற்கு இடது குறிகாட்டியையும், வலதுபுறம் திரும்புவதற்கு வலது குறிகாட்டியையும் பயன்படுத்தவும்.
- திருப்பத்தை முடித்த பிறகு குறிகாட்டிகளை நிறுத்தவும்.

**வெள்ளைக் கோட்டின் பின்னால் நிறுத்தவும்**

- இது பாதசாரி கடக்கும் இடத்தை தெளிவாக வைத்திருக்கும் மற்றும் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கின்றது.

**நகரும் முன் இடது மற்றும் வலதுபுறம் பாருங்கள்**

- பச்சை நிறத்திலும் சமிக்ஞையை மீறி வாகனங்கள் செல்லலாம் எனவே செல்வதற்கு முன் இருபுறமும் சரிபார்க்கவும்.
- வீதியைக் கடக்கக்கூடிய பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டுபவர்களைக் கவனித்து முன்னோக்கிச் செல்லுங்கள்.

**பாதசாரிகளை கவனத்திற்கொள்ளுங்கள்**

- பாதசாரிக் கடவையில் உள்ளவர்களுக்கு எப்போதும் முன்னுரிமை கொடுங்கள்.
- பாடசாலைகள், கோயில்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் நெரிசலான பகுதிகளுக்கு முன்னால் மெதுவாகச் செல்லுங்கள்.

**பாதையின் சரியான பகுதியின் வழியாக செல்லுங்கள்**

- இடது பக்கம் திருப்பங்கள் என்றால் இடது பாதையையும், வலது பக்கம் திருப்பங்கள் என்றால் வலது பாதையையும் பயன்படுத்தவும்.
- சந்திக்கு அருகில் பாதைகளை மாற்ற வேண்டாம்.

**உங்கள் திருப்பத்திற்காக பொறுமையாக காத்திருங்கள்**

- குறியீட்டு பலகைகள் இல்லாத பரபரப்பான சந்திப்புகளில், போக்குவரத்தைக் கடப்பதற்கு முன் தெளிவான இடைவெளிக்காக காத்திருக்கவும்.
- வலதுபுறம் திரும்புவதற்கு முன் எதிரே வரும் வாகனங்கள் கடந்து செல்ல அனுமதியுங்கள்.

**சாரதிகள் தவிர்க்கவேண்டியவை**

- போக்குவரத்தை சரிபார்க்காமல் வலதுபுறம் திரும்பவேண்டாம்
  சமிக்ஞை விளக்கிற்கு அருகில் முந்திச் செல்லவேண்டாம். இது குழப்பத்தையும் திடீர் பக்கவாட்டு விபத்துகளையும் ஏற்படுத்துகிறது.
- பிற வாகன ஓட்டுநர்களை நகர்த்த ஒலி எழுப்பவோ அல்லது அழுத்தம் கொடுக்கவோ வேண்டாம் பொறுமையாக இருங்கள். வாகன ஒலிகள் சமிக்ஞையை மாற்றாது!
- சந்தியில் வாகனநெரிசலை ஏற்படுத்தாதீர்கள்
- இரவு அல்லது அதிகாலையில் சமிக்ஞையைப் புறக்கணிக்கவேண்டாம்
- மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்கள்: சமிக்ஞைகளில் வாகனங்களுக்கு இடையில் சென்று வாகன நெரிசலை ஏற்படுத்தாதீர்கள்.
- சமிக்ஞைகளில் காத்திருக்கும்போது தொலைபேசிகளைப் பயன்படுத்த வேண்டாம்


நிறைவாக

சமிக்ஞைச் சந்திகள் போர்க்களங்கள் அல்ல. அவை அனைவரும் ஒன்றாக பாதுகாப்பாக செயற்படவேண்டிய இடங்கள் ஆகும். ஒழுக்கம், பொறுமை மற்றும் விழிப்புணர்வு உங்கள் உயிரைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், சாலைகளை அனைவருக்கும் பாதுகாப்பான இடமாக மாற்றும். ஒவ்வொரு பயணமும் பொறுப்புணர்வுடன் தொடங்கட்டும் ஆபத்துடன் அல்ல.

## சொந்தம்


மலருக்கு வண்டு சொந்தம்
மது இருக்கும் வரை
மாமரத்துக்கு கிளிகள் சொந்தம்
மாங்கனி இருக்கும் வரை
குளத்துக்கு கொக்கு சொந்தம்
நீர் இருக்கும் வரை
மண்ணுக்கு மரம் சொந்தம்
மரவேர் இருக்கும் வரை
கண்ணுக்கு மணி சொந்தம்
உயிர் உள்ள வரை
மனிதா உனக்கு உன்
உறவுகள் சொந்தம்
பணம் இருக்கும் வரை...

திருமதி.ஆர்.தனபாலசிங்கம்
மூக்கரவத்தை
வல்வெட்டித்துறை



புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்
- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துகளைத் தடுப்போம் விழிப்பாய் இருப்போம்



மருத்துவக் கலாநிதி க.மணிதீபன்
(MBBS(SL), MD(SL), MRCEM(UK), FRCEM(UK))
*அவசர சிகிச்சை மருத்துவ நிபுணர்,*
*விபத்து மற்றும், அவசர சிகிச்சைப் பிரிவு,*
*யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை*

இலங்கையில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியிலும் விபத்துகளினால் ஏற்படும் இழப்புகள் நாளுக்குநாள் அதிகரித்தவண்ணமுள்ளன. வளர்ந்த மேலைத்தேய நாடுகளுடன் ஒப்பிடும் போது வளர்முக நாடுகளில் விபத்துகளினால் ஏற்படும் தாக்கங்கள் பாரதூரமாக இருப்பதுடன், அந்நாட்டின் பொருளாதார, சமூக முன்னேற்றங்களில் தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது. குறிப்பாக, இலங்கை போன்ற நாடுகளில் இது ஒரு பெரும் பிரச்சினையாக உருமாறிவருகின்றது.
விபத்துகளினால் ஏற்படும் பாதிப்புகள் வெறுமனே சுகாதாரத் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தாது சமூக, பொருளாதார மட்டங்களிலும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. விபத்துகளினால் பாதிக்கப்பட்ட நபர்கள் மட்டுமல்லாது அவர்களுடைய குடும்பங்கள் மற்றும், சுற்றியுள்ளோரையும் இது தாக்கத்துக்கு உள்ளாக்குகின்றது.

### விபத்துகளுக்கான காரணிகள்

வாகனம் செலுத்துவது பற்றிய போதிய அறிவின்மை, வீதிச் சமிக்ஞைகளைப் பற்றிய தெளிவின்மை, வீதிப் பாதுகாப்புப் பற்றி அறிவுறுத்தப்பட்டாலும் மக்கள் அசண்டையீனமாக செயற்படுவது, பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றத் தவறுகின்றமை அல்லது முறையாகப் பின்பற்றாமை, குறிப்பாக தலைக்கவசம் அணியத்தவறுதல், கார் மற்றும், நான்கு சக்கர வாகனங்களில் செல்லும்போது பன்னிரண்டு வயதுக்குக் குறைந்த குழந்தைகளை சாரதியின் அருகிலுள்ள முன் இருக்கையில் இருத்திச் செல்லுதல், வீதிகளில் பயணம் செய்வோர் வீதிச் சட்டதிட்டங்களை அறிந்துகொள்ளாமலிருப்பதுடன், அச்சட்டதிட்டங்களைப் பின்பற்றத் தவறுதல், உதாரணமாக, வீதிகளில் செல்ல வேண்டிய வேகம் மணிக்கு 50 கி.மீ. என்றிருக்கின்றபோது சாரதிகள் 80 அல்லது 100 கி.மீ. வேகத்தில் செல்வதனால் விபத்துகள் விளைகின்றன. வீதிகளில் பயணிப்பதற்குப் பொருத்தமற்ற தரம் குறைவான வாகனங்களைப் பாவிப்பதுடன், பழுதடைந்த வாகனங்களையும் பாவித்தல்,வீதிகளின் தரம் உயர்த்தப்பட்டாலும் சில வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுதல், வீதியோரத்திலுள்ள சமிக்ஞைகள் சரியாகப் பராமரிக்கப்படாமை, விபத்து ஒன்று ஏற்பட்டதன் பின்பு அவ்விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களுக்குத் தேவையான மருத்துவ முதலுதவிகள் பற்றிய அறிவு மக்களிடையே போதியளவில் காணப்படாமை, இலங்கையில் அவசர மருத்துவ சேவையாகிய 1990 சுவசேரிய சேவை இற்றைக்குப் பத்து வருடங்களின் முன் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் மக்களுக்கு அது பற்றிய விழிப்புணர்வு இல்லாமலிருப்பதுடன், அவர்களுடைய சேவை அனேகமான வீதி விபத்துகளின்போது முறையாகக் கிடைக்கப்பெறுவதில்லை. மேலும் அவர்களுடைய போதிய பயிற்சியின்மை காரணமாகவும் நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாகவும் மேலைத்தேய நாடுகளில் காணப்படுகின்ற மாதிரியான அவசர மருத்துவ சேவை வீதி விபத்துகளின்போது கிடைக்கப்பெறுவதில்லை.

### விபத்துகளின் தாக்கம்

இவ்விபத்துகளின் தாக்கங்களை உடனடியாக ஏற்படும் தாக்கங்கள், நீண்ட காலப்போக்கில் ஏற்படும் தாக்கங்கள் என இரு பிரிவுகளாக நோக்க முடியும். வீதி விபத்துகளின் மூலம் இள வயது நபர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். 15 - 45 வயதுக்குட்பட்ட உழைக்கும் வர்க்கமே விபத்துகளினால் பாதிக்கப்படுகின்றது.
அனேகமான வீதி விபத்துகள் அதிகரித்த வேகம் காரணமாகவும் பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிக்காமையாலும் நடைபெறுகின்றன. இதனால் விபத்து நடந்த இடத்திலேயே இறப்புகளும் நிகழ்கின்றன. விபத்துகளினால் ஏற்படும் காயங்கள் மிகவும் தீவிரமானவையாக இருப்பதுடன், உடலின் பல்வேறு பாகங்களையும் பாதிக்கின்றது. உதாரணமாக, தலையில் ஏற்படும் காயங்களுடன், கை, கால் முறிவு என்பன நிகழ்வதனால் இதன் தாக்கம் நோயாளியைப் பொறுத்தமட்டில் பாரதூரமாக இருக்கும். மேலும், இவற்றைக் குணமாக்குவதற்கு மிகுந்த செலவுகள் மற்றும், சிரமங்கள் ஏற்படும். வாகனங்கள் பழுத்தடைவதுடன், அவற்றினால் ஏற்படுகின்ற பாதிப்புகளும் அவற்றைப் பாவிக்கமுடியாத அளவுக்கு இட்டுச்செல்வதுடன், மிகுந்த செலவீனத்தையும் ஏற்படுத்துகின்றது. விபத்துகளின் மூலம் ஏற்படும் உயிரிழப்புகள் பாரிய காயங்கள் மற்றும், இதர செலவீனங்களினால் பாதிக்கப்பட்ட நபரோ அல்லது அவர் சார்ந்த நபர்களோ மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாக்குவதுடன் மன அழுத்தங்கள் ஏற்படவும் காரணமாகின்றது. பாதிக்கப்பட்ட நபரைப் பராமரிப்பதற்கு மருத்துவமனைகளில் ஏற்படுகின்ற செலவானது அக் குடும்பத்துக்கும் அரசாங்கத்துக்கும் பெரிய சுமையாக உள்ளது.
இலங்கையின் வீதி விபத்துகளின் தரவுகளின்படி, வட மாகாணம் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வீதி விபத்துகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த வீதி விபத்துகளில் பல்வேறு வகையான வாகனங்கள் ஈடுபட்டிருப்பதுடன், அவற்றின் முறையற்ற பயன்பாடும் இதற்குக் காரணமாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் துவிச்சக்கரவண்டிகள் முதல் கனரக வாகனங்கள் வரை பல்வேறு வகையான வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. இந்தப் பல்வகை வாகனங்களின் வேகமான ஓட்டம் யாழ் மாவட்டத்தில் விபத்துகள் அதிகரிப்பதற்கு முக்கியமான காரணமாக உள்ளது. குறிப்பாக, முச்சக்கரவண்டிகள் மற்றும் டிப்பர் வாகனங்களால் ஏற்படும் விபத்துகள் அளவுக்கதிகமாகவும், பெரும் தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன. யாழ்ப்பாணத்தில் சமீபத்திய காலங்களில் இவற்றால் ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேலும், இந்த விபத்துகளின் விளைவாக சம்பவ இடத்திலேயே அதிகரித்த மரணங்களும் நிகழ்கின்றன.

### சிகிச்சை முறைகள்

வீதி விபத்துகளால் பாதிக்கப்படும் நபர்கள், ஏற்பட்ட காயத்தின் தீவிரத்தின்படி சிறு காயங்களுக்கு உள்ளானோர், நடுத்தரக் காயங்களுக்கு உள்ளானோர், தீவிரமான காயங்களுக்கு உள்ளானோர் அதிதீவிரமான காயங்களுக்கு உள்ளானோர் என வகைப்படுத்தப்படுவர்.
இந்த வகைப்பாட்டின் அடிப்படையில், பாதிக்கப்பட்டவரின் நிலை மற்றும் குணமடையும் வாய்ப்புகள் மதிப்பிடப்படுகின்றன. சிறு மற்றும் நடுத்தரக் காயங்களுக்கு உள்ளானவர்களுக்கு முதலுதவி மற்றும் சிறிய மருத்துவமனை சிகிச்சைகள் போதுமானவை. இவர்களின் பராமரிப்புச் செலவுகள் குறைவாக இருப்பதுடன், 24 மணி நேரத்திற்குள் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பலாம். எனவே, இவர்களுக்கான மருத்துவச் செலவுகள் மிகக் குறைவு. இவர்களை சிறிய மருத்துவமனைகளிலோ அல்லது ஆரம்ப சுகாதார மையங்களிலோ மருத்துவர்கள் பரிசோதிப்பதுடன், முதலுதவி மற்றும் காயங்களுக்கான மருந்துகள் போன்ற சிறிய சிகிச்சை முறைகள் போதுமானவை.
ஆனால், தீவிர மற்றும் அதிதீவிரக் காயங்களுக்கு உள்ளானவர்களுக்கு மிகவும் சிறப்பு மருத்துவ வசதிகள் தேவைப்படுகின்றன. மேலும், பல்வேறு மருத்துவ நிபுணர்கள் மற்றும் துணை மருத்துவ சேவைகளின் உதவி தேவைப்படுகிறது. இவர்களுக்கு பல உடல் பாகங்களில் காயங்கள் ஏற்பட்டிருக்கலாம், ஒவ்வொரு உடற்பகுதிக்கும் தனித்தனி மருத்துவ நிபுணர்களின் சேவை தேவைப்படுகிறது. உதாரணமாக, ஒரு விபத்தில் தலை, கை மற்றும் கால்களில் காயங்கள் ஏற்பட்டிருந்தால், சிறப்பு மருத்துவமனைகளில் (குறிப்பாக போதனா மருத்துவமனையில்) அவசர மருத்துவ நிபுணர்கள், நரம்பியல் மருத்துவ நிபுணர்கள், எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர்கள் போன்றோரின் உதவி தேவைப்படுகிறது. மேலும், இத்தகைய நோயாளிகளை சாதாரண வார்டுகளில் பராமரிக்க முடியாது. இவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பராமரிப்பாளர்கள் தேவைப்படுகிறார்கள். அதாவது, அதிதீவிர சிகிச்சைப் பிரிவு (ICU) அல்லது உயர் சிகிச்சைப் பிரிவுகளில் வைத்து பராமரிக்க வேண்டும். மேலும், இவர்களுக்கென சிறப்புப் பயிற்சி பெற்ற செவிலியர்கள் மற்றும் பிற சேவைகள் தேவைப்படுகின்றன. இவ்வாறு பாதிக்கப்பட்ட நபர்கள் குறைந்தது ஏழு முதல் பத்து நாள்கள் வரை மருத்துவமனையில் தங்க வேண்டியதாகிறது. இத்தகைய நோயாளிகளைப் பராமரிப்பதற்கு நாள் ஒன்றுக்கு இரண்டு முதல் மூன்று இலட்சம் ரூபாய் வரை அரசாங்கத்திற்கு செலவாகிறது.
யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை, தீவிர மற்றும் அதிதீவிரக் காயங்களுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதற்கான தரவுகள் போதிய அளவு கிடைக்காததால், இந்த நிலை வெளி உலகத்திற்குத் தெரியவருவதில்லை. எனினும், இதன் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வட மாகாணத்தில், இத்தகைய சேவைகளை வழங்கும் நிறுவனமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மட்டுமே உள்ளது. இந்த மருத்துவமனையில் அனைத்து வகையான மருத்துவர்களும் இருந்தபோதிலும், விபத்துகள் அதிக அளவில் நடைபெறுவதால், போதிய சிகிச்சை வழங்குவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. மருத்துவமனையின் அனைத்து வளங்களும் இத்தகைய காயங்களுக்கு உள்ளான நோயாளிகளுக்கே பயன்படுத்தப்படுகின்றன. அதிதீவிர சிகிச்சைகள் மற்றும் அவசர சிகிச்சைகள் கடினமாக வழங்கப்பட்டாலும், காயங்களின் தீவிரம் காரணமாக துரதிர்ஷ்டவசமாக மரணங்கள் நிகழ்கின்றன.
இந்நாட்டில் சாலை மற்றும் வீதி வளர்ச்சிப் பணிகள் நடைபெற்ற போதிலும், மருத்துவமனைகள் மற்றும் சுகாதார சேவைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், சுகாதாரத் துறை இந்த விபத்துகளின் பாதிப்புகளை சமாளிக்க முடியாத நிலையில் உள்ளது.
வெளிநாடுகளில் உள்ளது போன்று அம்புலன்ஸ் வசதிகள் அல்லது ஹெலிகொப்டர் அம்புலன்ஸ் வசதிகள் இங்கு இல்லாததால், விபத்து நடந்த இடத்தில் அவசர முதலுதவி மற்றும் சிகிச்சைகள் கிடைப்பதில்லை. இதனால், பாதிக்கப்பட்டவர் களின் நிலை மேலும் மோசமடைகிறது. மேலும், இந்நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட விபத்து மருத்துவ சேவைகள் இல்லாததால், சரியான நேரத்தில் சிகிச்சை வழங்க முடியவில்லை. விபத்து நடந்த நேரத்திலிருந்து முதல் ஒன்று இரண்டு மணி நேரம் "பொன்மணி நேரம்" (Golden Hour) என அழைக்கப்படுகிறது. இந்த நேரத்தில் வழங்கப்படும் சிகிச்சை, பாதிக்கப்பட்டவரின் உயிரைக் காப்பாற்ற உதவுகிறது. யாழ் மாவட்டத்தில், இது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. உதாரணமாக, ஆனையிறவுப் பகுதியில் விபத்து ஏற்பட்டால், பாதிக்கப்பட்டவருக்கு அவசர மருத்துவ உதவி வழங்க அம்புலன்ஸ் செல்வதற்குக் குறைந்தது அரை மணி நேரம் ஆகும். அவரைக் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கோ அல்லது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கோ கொண்டு செல்ல குறைந்தது முக்கால் மணி நேரம் தேவைப்படுகிறது. இதனால், பொன்மணி நேரத்தில் செய்யப்படவேண்டிய அவசர சிகிச்சைகள் தாமதமாகி, பாதிப்புகள் அதிகரிக்கின்றன.

### விபத்துகளைத் தடுத்தல்

மேலே குறிப்பிட்டபடி, விபத்துகளால் ஏற்படும் இழப்புகள் அதிகரித்துவருவதால், இவற்றைத் தடுப்பதே சிறந்த முறையாகும். நாட்டின் பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் போதிய மருத்துவ வசதிகள் இல்லாததால், விபத்துத் தடுப்பு முக்கியமானது. மேற்கத்திய நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகளில், விபத்துகளைத் தடுப்பதற்கு அரசாங்கங்கள் கடுமையான சட்டங்களை அமுல்படுத்தியுள்ளன.
விபத்துத் தடுப்புக்கு 3E அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. இந்த அணுகுமுறை மூலம் விபத்துகள் குறைவதைக் காணலாம். இந்த அணுகுமுறையானது: கல்வி (Education) வீதிப் பாதுகாப்பு குறித்த அறிவைப் பரப்புதல், பொறியியல் (Engineering) - வீதிகளைப் பாதுகாப்பாக வடிவமைத்தல், சட்ட அமுலாக்கம் (Enforcement) - விதிகளைக் கடுமையாகப் பின்பற்றுதல் என்பதாகும்.

#### 1. கல்வி வழங்கல்

சிறு வயதிலிருந்தே வீதிப் பாதுகாப்பு குறித்த கல்வியை வழங்குவதன் மூலம், மக்களுக்கு இதுபற்றிய அறிவு ஏற்படும். இதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டியதுடன், மக்களும் இதில் ஆர்வம் காட்டவேண்டும்.

#### 2. சூழலியல் பொறிமுறைப்படுத்தல்

வீதிகளின் தரம் மேம்படுத்தப்படவேண்டும். மேலும், வீதிச் சமிக்ஞைகள் மற்றும் விதிகள் தெளிவாக இருக்கவேண்டும். பழுதடைந்த சாலைகள் சீரமைக்கப்படவேண்டும்.

#### 3. சட்ட அமுலாக்கம்

வீதி விதிகளைக் கடுமையாகப் பின்பற்ற வேண்டும். விதிகளை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். எனவே, வீதி விபத்துகளைத் தடுப்பதில் அரசாங்கம் மட்டுமல்ல, ஒவ்வொரு குடிமகனும் பொறுப்பாக இருக்க வேண்டும். **"இது என் வீதி, இங்கு நடக்கும் விபத்துகளுக்கு நானும் பொறுப்பு" என்ற எண்ணத்துடன் அனைவரும் செயற்படவேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 03 . 1951



மறைவு
20 . 07 . 2025

## Dr. கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன்

(தலைவர் - Masterfeeds (Pvt) Ltd and Vethouse (Pvt) Ltd, past president of Rotary Club Colombo Midtown, longstanding past president of Kokuvil Hindu College OSA, Colombo and revered member of the Chinmaya Mission Sri Lanka).

மலேசியாவை வசிப்பிடமாகக் கொண்ட Dr.கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் அவர்கள் கடந்த (20.07.2025) ஞாயிற்றுக் கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சீத்தாலக்ஷ்மி (கொக்குவில்) தம்பதியரின் அன்பு புதல்வரும், காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம் - மங்கையக்கரசி (கொக்குவில்) தம்பதியரின் மருமகனும், விஜயலக்ஷ்மியின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான லீலாவதி, செல்வரத்தினம், சறோஜினிதேவி, பஞ்சாட்சரம், புஸ்பாவதி ஸ்ரீசடாச்சரம், கணபதிப்பிள்ளை குமரேசன் ஆகியோரின் அன்பு சகோதரனும், பிரிந்தா, ஆர்த்திகா, ராகுலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2025) வியாழக்கிழமை மலேசியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

SID - +6011 1233 9179
Ragulan - +94 70 354 0966
Bhavesh - +44 7866 308 172

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
08 . 07 . 1942



இறப்பு
22 . 07 . 2025

## துரைசிங்கம் சரஸ்வதி

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் சரஸ்வதி அவர்கள் நேற்று (22.07.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-லச்சுமி தம்பதியின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற துரைசிங்கம் (JP) அவர்களின் அன்பு மனைவியும் அறிவழகன், அன்பழகன், அறிவழகி, அன்பழகி, இன்பழகி, பேரழகி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராஜா, குலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr. கோகுலன், Dr.வேணுகா, நிலின்ஸ், Dr.பலிதா, சர்மிளா, நிரோஜன், நிசாந்தன், சர்மில் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிழன், ஆயுஸ்மன், லோலிதா, லோறா, அனீஸ், ஆதிரா, சர்விகா, தியாஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

K.K.S Road,
இணுவில்.

தகவல்:
New Lanka Farm
குடும்பத்தினர்.
077 612 9343
074 297 8154

## 42 ஆவது...

இடம்பெறவுள்ளது. தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும், கொழும்பிலும் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. யாழ்ப்பாணப் பொதுநூலகத்துக்கு அருகில் மாலை 4 மணியளவிலும், யாழ்ப்பாணம் முனியப்பர் கோவிலடியில் மாலை 5 மணியளவிலும் நினைவேந்தல் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் முனியப்பர் கோவிலுக்கு அருகில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

# சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல/திகதி :- J/1594 - 11.03.1972

**கண்ணாடி அலுமினிய பிற்றிங் வேலைகள்**

எமது சங்கத்தின் தலைமைப் பணிமனைக்கு கண்ணாடி அலுமினிய பிற்றிங் வேலைகள் மேற்கொள்வதற்கான கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றது. இவ் வேலையினை மேற்கொள்ள விரும்புபவர்கள் இதற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூ.500.00 இனை செலுத்திப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 05.08.2025ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **"தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். டச்சு வீதி சாவகச்சேரி"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**குறிப்பு :- சங்கத்தின் பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதியானது என்பதனையும் விண்ணப்பக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

**பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்
திரு.சி.சுதர்சன்**

# மரண அறிவித்தல்

பிறப்பு
14 - 01 - 1945



இறப்பு
22 - 07 - 2025

## கணபதிப்பிள்ளை லலிதாம்பிகை (இராசநாயகி)

வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை லலிதாம்பிகை (இராசாநாயகி) அவர்கள் நேற்று (22.07.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - விசாலாட்சி அம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், ஆவரங்கால் சிவன் கோவிலடியை சேர்ந்த காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - பார்வதிப்பிளை தம்பதியினரின் மருமகளும், கணபதிப்பிள்ளை அவர்களின் மனைவியும், சுசிகரன், காலஞ்சென்ற குலரஞ்சிதம், மற்றும் சித்திராதேவி, சசிகுமார், வாகீசன் (கிராம சேவையாளர்) ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்றவர்களான பாலசூரியன், கிருபானந்தன், தற்பரானந்தன் மற்றும் வேதநாயகி, தையல் நாயகி அம்மா, காலஞ்சென்ற கலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வாசுகி (பதிவாளர் மாவட்ட நீதிமன்றம் சாவகச்சேரி), நந்தகுமார், அகல்யா (பிரதேச செயலகம் நல்லூர்), தவரூபி (பிரதேச செயலகம் கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், திருநாவுக்கரசு, தையல் நாயகி ஆகியோரின் மைத்துனியும், தமிழ்மாறன், தமிழினி, தமிழ்வாணி, விதுரன், வினிதன், காருண்யா, அட்சயன், துளசிகன், காவியன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.07.2025) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ,அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ம் வட்டாரம்
வேலணை மேற்கு
வேலணை

தகவல்:
குடும்பத்தினர்.
021 221 3798

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல - J/1594 பதிவு திகதி - 11.03.1972

### பதவி வெற்றிடம்

01. பதவி - உள்ளகக் கணக்காய்வாளர்(01)
குறியீட்டு இல - 105/07 (02/2025 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் - 36125- 475X10-500X10-45875
பால் - ஆண்/பெண்

**தகைமைகள்:-(01/2021 இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 08 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் முகாமை நிலைப் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் முகாமை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா / இதற்குச் சமனான தகைமை / மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை தொடர்பாக ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.
க.பொ.த.உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்./ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை தொடர்பாக ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

**குறிப்பு :-**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி - 05.08.2025**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் உள்ளகக் கணக்காய்வாளர்(105/07) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். டச்சு வீதி சாவகச்சேரி எனும் முகவரிக்கு 05.08.2025ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்
டச்சு வீதி. சாவகச்சேரி.
23.07.2025

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்
திரு.சி.சுதர்சன்

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல - J/1594 பதிவு திகதி - 11.03.1972

### பதவி வெற்றிடம்

01. பதவி - களஞ்சிய மேற்பார்வையாளர் (கிளை மேற்பார்வையாளர்) (02)
குறியீட்டு இல - 207/10 (02/2025இன்படி)
சம்பள அளவுத் திட்டம் - 34745- 445X10-450X10-43695
பால் - ஆண்

**தகைமைகள்:-(01/2021 இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர் / கிளை மேற்பார்வையாளர்/கிளை முகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்./
அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**குறிப்பு :-**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி - 05.08.2025**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் களஞ்சிய மேற்பார்வையாளர்(207/10) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். டச்சு வீதி சாவகச்சேரி எனும் முகவரிக்கு 05.08.2025ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்
டச்சு வீதி
சாவகச்சேரி.
23.07.2025

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்
திரு.சி.சுதர்சன்

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல - J/1594 பதிவு திகதி - 11.03.1972

### பதவி வெற்றிடம்

01. பதவி - களஞ்சியப் பொறுப்பாளர்(01)
குறியீட்டு இல. - 202/09 (02/2025 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் - 35200- 450X10-460X10-44300
பால் - ஆண்

தகைமைகள்:-(01/2021 இன் படி)

அ) கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர்/ கொள்வனவு உத்தியோகத்தர்/ கிளை மேற்பார்வையாளர் / கிளை முகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் வழங்கல் / களஞ்சிய முகாமை/சந்தைப்படுத்தல் முகாமை தொடர்பான டிப்ளோமா சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்/
க.பொ.த. உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

குறிப்பு :-

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி – 05.08.2025**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் களஞ்சியப் பொறுப்பாளர்(202/09) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். டச்சு வீதி சாவகச்சேரி எனும் முகவரிக்கு 05.08.2025ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்
டச்சு வீதி
சாவகச்சேரி.
23.07.2025

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்
திரு.சி.சுதர்சன்

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல - J/1594 பதிவு திகதி - 11.03.1972

### பதவி வெற்றிடம்

01. பதவி - அங்கத்தவர் பொதுசன தொடர்பு உத்தியோகத்தர்(01)
குறியீட்டு இல. - 123/05 (02/2025 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் - 37045- 490X10-540X10-47345
பால் - ஆண்/பெண்

**தகைமைகள்:-(01/2021 இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 6 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் முகாமை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 7 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் முகாமை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்/ அதற்குச்சமமான தகைமை. இத் தகைமையானது கணக்கியல்/வியாபாரப் புள்ளிவிபரவியல் மற்றும் வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். /
இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் / முகாமைத்துவம் / வியாபாரம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 07 ஆண்டு கால அனுபவம்./
க.பொ.த. உயர்தரப் பத்திரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கற்பித்தல் துறையில் ஆகக் குறைந்தது 08 ஆண்டு கால அனுபவம்.

**குறிப்பு :-**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி – 05.08.2025**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் அங்கத்தவர் பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் (123/05) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். டச்சு வீதி சாவகச்சேரி எனும் முகவரிக்கு 05.08.2025ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்
டச்சு வீதி
சாவகச்சேரி.
23.07.2025

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்
திரு.சி.சுதர்சன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிசுக்களின்...

செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் பதினேழாம் நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.
இதன்போதே, சிறார்கள் மற்றும் சிசுக்களுடையவை என்று சந்தேகிக்கப்படும் ஆறு அல்லது ஏழு என்புத் தொகுதிகளுடன், ஒட்டுமொத்தமாக எட்டு என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.
புதிதாக அடையாளம் காணப்பட்ட எட்டு என்புத் தொகுதிகளுடன் சேர்த்தால், இதுவரை 80 என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 65 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் எஸ். லெனின்குமாரின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர் ஆகியோர் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## பாலூட்டும்...

காணப்பட்டுள்ளது. செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகளின் பதினேழாம் நாளான நேற்றையதினமே அந்தப் போத்தல் அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் மீதான மேலதிக அகழ்வுப் பணிகள் இன்று தொடரவுள்ளன.

(அ-ம-26)

## தமிழர்களின்...

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
செம்மணிப்புதைகுழி கனதியான பல செய்திகளைச் சொல்கின்றது. குழந்தைகள், சிறார்கள், முதியவர்கள் எனப் பலரும் புதைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாகத் தமிழர்களின் கருவைக்கூட அறுத்துள்ளனர். தமிழினப் படுகொலை நடந்துள்ளது என்பதற்கு இது அத்தாட்சியாகும்.
எனவே, சர்வதேச நியதிகளின் அடிப்படையில் சர்வதேச நாடுகள் மற்றும் நீதிமன்றங்களின் ஒத்துழைப்புடனேயே இனப்படுகொலைக்கு எதிரான விசாரணை நடவடிக்கை இடம்பெறவேண்டும். ஏனெனில் உள்ளகப் பொறிமுறையென்பது தோல்வி அடைந்துள்ளது.
கடந்த காலங்களில் உள்ளகப் பொறிமுறை ஊடாக போலியான தகவல்களே வெளியிடப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள்ளகப் பொறிமுறைமீது நம்பிக்கை இல்லை. வடக்கு, கிழக்கில் எங்கு தோண்டினாலும் தமிழர்கள் திட்டமிட்ட அடிப்படையில் அழிக்கப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன - என்றார். (அ-ம-44)

## புலமைப்பரிசில்...

சில் பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 10ஆம் திகதி நடத்தப்படவுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகாகுமாரி லியனகே தெரிவித்தார்.
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 787 பரீட்சை நிலையங்களில் நடத்தப்படவுள்ளது.
முதலாவது வினாப்பத்திரம் முற்பகல் 9.30 முதல் முற்பகல் 10.45 வரையும், இரண்டாவது வினாப்பத்திரம் முற்பகல் 11.15 முதல் 12.15 வரையும் வழங்கப்படும்.
சகல பரீட்சார்த்திகளினதும் அனுமதி அட்டைகள் உரிய பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகளின் விவரங்களில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ளவேண்டி இருப்பின் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதிவரை இணையவழிமூலம் மேற்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## பதில்...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.
தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக, நாடாளுமன்றத்தால் விசேட ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது. உச்ச நீதிமன்ற நீதியரசர் பீரித்தி பத்மன் சூரசேன தலைமையிலான அந்தக் குழுவினர், தமது அறிக்கையை நாடாளுமன்றத்தின் கவனத்துக்காகச் சமர்ப்பித்துள்ளனர். அதிலேயே, தேசபந்து தென்னக்கோன் குற்றமிழைத்துள்ளார் என்று அதிகாரபூர்வமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், தேசபந்து தென்னக்கோனை பதவியிலிருந்து நீக்குமாறு விசாரணை ஆணைக்குழு பரிந்துரையும் செய்துள்ளது.
இந்த விடயங்களை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நாடாளுமன்றத்தில் நேற்று முறைப்படி அறிவித்தார். தென்னக்கோனை பதவி நீக்கும் செயன்முறைகள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் கருதப்படுகின்றது. (அ-ம-44)

## அத்துமீறிய...

ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்படையினராலேயே அவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மீனவர்கள் நால்வரும் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், அனைவரையும் எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-56-35)

## வட்டுக்கோட்டை...

பொலிஸ்மா அதிபரிடம், மூளாய்ப் பகுதியைச் சேர்ந்த மக்கள் சிலர் முறையிட்டுள்ளனர்.
தற்போதைய பொறுப்பதிகாரி வேண்டாம் என்றும், பிறிதொரு பொறுப்பதிகாரியை நியமிக்குமாறும் கோரி அவர்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.
போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்ததாவது:-
அண்மையில் வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற மோதல்களுக்கு மூளாயில் உள்ள மதுபான நிலையம் ஒன்றுக்குள் இடம்பெற்ற சம்பவமே காரணமாகும். இதன்போது எமது கிராமத்தைச் சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டனர். இது தொடர்பில் முறைப்பாடு வழங்கச் சென்றபோது, பொலிஸார் முறைப்பாட்டைப் பதிவுசெய்யவில்லை. ஆனால், தாக்குதல் நடத்திய ஒருவரைக் கைதுசெய்து வைத்திருந்தனர். ஏனையவர்களையும் கைதுசெய்யுமாறும், இந்த விடயத்தில் விசாரணை நடத்துமாறும் பொலிஸாரிடம் கோரினோம். ஆனால், பொலிஸார் எமது கருத்தைக் கவனத்தில் எடுக்காமல் எம்மை பொலிஸ் நிலையத்தில் இருந்து விரட்டினார்கள்.
பின்னர் எமது பகுதியைச் சேர்ந்த ஒருவர் வேலை முடிந்து வரும்போது மற்றைய குழுவினர் பிடித்துச் சென்று அவர்மீது கொடூரத் தாக்குதல் நடத்தினார்கள். நாங்கள் சம்பவம் அறிந்து சென்றபோது அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் அவரை பொலிஸ் நிலையம் கொண்டு சென்ற வேளை ஏற்கனவே தாக்குதலுக்கு உள்ளானதால் அவர் பொலிஸ் நிலையத்தில் மயங்கி விழுந்தார். அவரை மருத்துவமனைக்கு அனுப்புமாறு கோரியவேளை பொலிஸார் தாகாத வார்த்தையால் திட்டிவிட்டு, எம்மையும் இப்படித்தான் தாங்கள் தாக்கிவிட்டு உள்ளே தூக்கிப் போடுவோம் எனக் கூறினர். பின்னர் நாங்கள்தான் அம்புலன்ஸை அழைத்து அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றோம்.
இதற்குப் பின்னர்தான் ஞாயிற்றுக்கிழமை கலவரம் ஏற்பட்டது. அவர்கள் ஒரு குழுவாக இணைந்து எமது ஊருக்குள் தாக்குதல் நடத்துவதற்கு வரும் போதே எமது ஊர் மக்கள் இணைந்து அவர்களை விரட்டியடித்தனர். ஆனால், எம்மில் தவறிருப்பதாகக் காண்பிக்கப்படுகின்றது.
வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்துக்குப் புதிய பொறுப்பதிகாரி வந்த பின்னர் பொலிஸ் காவலில் வைத்து ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார். பொன்னாலை பகுதியில் இருந்து சந்தேகநபர் ஒருவரை கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோர் பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் அவர் சில தினங்களுக்கு பின்னர் பொன்னாலையில் புதர் ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். இதுபோன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே இந்தப் பொறுப்பதிகாரி எமக்கு தேவையில்லை. ஒரு திறமையான, நேர்மையான பொறுப்பதிகாரியை எமது பொலிஸ் நிலையத்துக்கு வழங்க வேண்டும் - என்றனர். (அ-ம-27)

## 86...

கொழும்பில் நேற்றுமுன்தினம் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டிருந்த நபரொருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில், கொழும்பிலிருந்து வந்திருந்த புலனாய்வுத்துறை அதிகாரிகளும், வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரும் இணைந்து செட்டிகுளம் துட்டுவாகை மற்றும் நேரியகுளம் பகுதிகளில் உள்ள இரு வீடுகளில் சோதனையை மேற்கொண்டனர்.
இதன்போதே, வவுனியா நேரியகுளம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து 86 கைக்குண்டுகள், ரி56 ரக துப்பாக்கிக்கான தோட்டாக்கள், கைத்துப்பாக்கித் தோட்டாக்கள், 5 ஆயிரத்து 600 போதை மாத்திரைகள், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளன.
இவற்றை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

**(தொடர்புடைய செய்தி உள்ளே)**

## புலிகளின்...

இலங்கையின் வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் துல்லியமான தகவல்களைப் புலனாய்வாளர்கள் வழங்கியிருந்தனர். அப்படியான சேவைகளை வழங்கியவர்கள் தண்டிக்கப்பட்டால், இதன்பின்னர் ஆயிரம் குண்டுகள் வெடித்தாலும் தகவல்களை வெளியிடபுலனாய்வாளர்கள் முன்வரமாட்டார்கள். பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ள நிலந்த ஜயவர்த்தனவுக்காக அல்ல, உண்மை மற்றும் நீதிக்காகவே நான் குரல் கொடுக்கின்றேன்.
எமது இராணுவத்தினரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, நீதி மற்றும் உண்மைக்காக முன்னிலையாகும் பொறுப்பு என்பன எம்முன் உள்ளன. அதற்காக நாம் முன்னிலையாவோம். இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னர் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினோம். அப்போது என்னை 'இரத்தப் பிசாசு' என்று முத்திரை குத்தினார்கள். அந்தத் துன்பங்களைத் தாங்கிக்கொண்டுதான் நாடு சரியான திசைக்கு வரும்வரை போராடினோம்.
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியில் இராணுவத்தினர் உள்ளனர் என்பது போன்று காண்பிக்க முனைகின்றனர். இராணுவத்தினர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என புலிகளால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை நியாயப்படுத்தும் வகையில்தான் இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன - என்றார்.

(அ-ம-44)

## வெலிக்கடைப்...

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி ஆகியோர் வெலிக்கடை சிறைச்சாலையில் கண்கள் பிடுங்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டே கொலை செய்யப்பட்டார்கள். எங்கே புதைக்கப்பட்டார்கள் என்பதை இன்னமும் அறியமுடியாமல் உள்ளது. எனவே, கடந்த கால கொலைகளைப் பற்றி விசாரிக்கும் இந்த அரசாங்கம், வெலிக்கடைச் சிறைப்படுகொலை பற்றியும் விசாரிக்க வேண்டும். ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக்காலத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது - என்றார்.

(அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணுக்காயில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூலை 23

துணுக்காய் முன்னாள் பிரதேச செயலாளர் அமரர் நா.நந்தகுமார் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 2 மணி வரை இடம்பெறவுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இந்தக் குருதிக் கொடை முகாம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (ச-25, 35)



### அரசியற்கைதிகளின் விடுதலைக்கு

# ஒரு குவளை தண்ணீர் வாகனப் பவனி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் வகையில் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் நடப்படவுள்ள விடுதலை விருட்சத்துக்கான நீர் சேகரிக்கும் வாகனப் பவனி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இருந்து நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் வகையிலான அணி திரள் நிகழ்வு 24ஆம் 25ஆம் திகதிகளில் நல்லூர் கிட்டுப் பூங் காவில் நடைபெறவுள்ளது.

அந்த நிகழ்வின் பிரதான அங்கமாக விடுதலை வெளிச்சத்துக்கான நீர் சேகரிப்பு தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தன்னார்வலர்கள் மற்றும் பொது அமைப்புகள் உங்கள் பிரதேசங்களில் விடுதலை விருட்சத்துக் கான நீரினை சேகரித்து கிட்டு பூங்காவில் இடம்பெறும் விடுதலை நிகழ்வில் கையளிக்க முடியும்.

மேலும் தங்கள் பிரதேசத்துக்கு வரும் நீர் சேகரிக்கும் வாகனத்திலும் தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலையை முன்னிறுத்தி ஒரு குவளை நீரை நீங்களும் வழங்க முடியும் என குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ச-26-27)

## வில்லூன்றியில் ஆடி அமாவாசை

யாழ்ப்பாணம், ஜூலை 23

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசை நடைபெற்று காலை 6.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தீர்த்தவாரியும் நடைபெறும். காலை 8 மணிமுதல் பொதுமக்கள் வில்லூன்றித் தீர்த்தக் கரையில் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

**காணி விற்பனைக்கு**

தாவடியில் K.K.S வீதிக்கு மிக அருகில் ரம்மியமான சூழலில் குடியிருப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**077 786 6447**

**பெண் வேலையாள் தேவை**

அரச உத்தியோகத்தரின் வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு 40-50 வயதிற்குட்பட்ட பெண் வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு:
**077 616 9786**

**வேலை வாய்ப்பு- JOB BANK**

அரச அங்கிகாரம் பெற்ற நிறுவனத்தில் வங்கித் துறையில் வேலை செய்ய ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். A/L படித்தவர்களுக்கு மட்டும். வயது எல்லை 23-35 இருபாலரும்.

தொடர்பு:- **077 335 3461**

## இணுவில் ஆஞ்சநேயர் மஹா கும்பாபிஷேகம்

இணுவில் - மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.35 மணி முதல் 9.18 மணிவரையுள்ள சுப முகூர்த்தவேளையில் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.

அதனையொட்டி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி புதன்கிழமை காலை 9.05.-10.05 மணிவரையுள்ள சுபவேளையில் கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன.

ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிமுதல் 27ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## காளி காவியம் நூல் வெளியீடு

உரும்பிராய் வேம்பன்சீமா பதியுறை அருள்மிகு காளியம்பாள்மீது பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தால் புனையப்பட்ட காளி காவியம்(மும்மணிக்கோவை) நூல் வெளியீட்டு விழா ஆலயத்தின் காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் தகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தீவக வலயப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் பஞ்சாட்சரம் கணேசன் நிகழ்வைத்தொகுத்து வழங்குவார். (ச-25)

# இருண்டே இருக்கின்ற ஜூலையின் இரவுகள்!

### முன்னாள் எம்.பி சரவணபவன் அறிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 23

கறுப்பு ஜூலைக் கலவரங்கள் ஏற்பட்டமைக்கான காரணங்களும், தமிழர்களின் வாழ்வும் தொடர்ந்தும் இருளாகவே இருக்கின்றன இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் இதே நாள்களில் இலங்கைத் தீவு பற்றியெரிந்தது. கறுப்பு ஜூலை என்று அடையாளப்படுத்தப்பட்டன அந்த நாள்கள். சுமார் ஒரு வாரத்துக்கும் மேலாக இடம்பெற்ற இந்த மிலேச்சத்தனமாக தாக்குதல்களில், 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். சுமார் 2 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்தனர். பல்லாயிரக் கணக்கானவர்கள் காயமடைந்தனர். எதற்காக இந்தக் கறுப்பு ஜூலை கலவரங்கள் இடம்பெற்றன என்று எண்ணிப் பார்த்தால் அதற்கான காரணங்கள் இன ஒடுக்குமுறைகளும் அடக்குமுறைகளும்தான்.

இன்று தமிழர் தேசத்தில் இடம்பெறும் அத்துமீறல்கள் கொஞ்சநஞ்சம் அல்ல. ஏகப்பட்ட வடிவங்களில் பல்வேறு பிரச்சினைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இந்தத் தேசத்தில் தமிழ் மக்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இவ்வளவு பாரதூரமான விரிசல் விழுந்ததோ அந்த விரிசலை நெருக்கமாக்குவதற்குப் பதிலாக இன்னும் பிளவுபடுத்தி அந்தப் பிரிவினையை தமது வாக்குவங்கியாக்கி ஆட்சியதிகாரத்தில் குளிர்காயவே சிங்கள - பௌத்த பேரினவாத ஆட்சியாளர்கள் கண்கணம்கட்டி நிற்கின்றனர். இத்தகைய மனநிலை மாறாத வரை, கறுப்பு ஜூலை மட்டுமல்ல இலங்கையின் எதிர்காலமும் இருண்டேதான் இருக்கும் - என்றுள்ளது. (ம-இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 25 . 01 . 1939



உதிர்வு 22 . 07 . 2025

**வேலுப்பிள்ளை பரமசிங்கம்**
**(ஓய்வு நிலை மருந்தாளர்)**

புத்தூரை பிறப்பிடமாகவும், உடுவில் வீதி மருதனார்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமசிங்கம் (ஓய்வு நிலை மருந்தாளர்) நேற்று (22.07.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ஜெயபத்மினிதேவியின் அன்புக் கணவரும், ஜெயந்தி (ஆசிரியை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) அவர்களின் அன்பு தந்தையும், ஞானகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும், ஹரிசன் (மிருகவைத்தியம் 1ம் வருட மாணவன் பேராதனைப் பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (23.07.2025) புதன்கிழமை காலை 09.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ச. ஞானகுமார்
077 978 1765

தகவல்:
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.